ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

Photo By
G. Krishnamachari,
I. C. I. Representative,
MADURAI.

ஸ்ரீ ஸுந்தரராஜன்னின் கள்ளர்திருக்கோலம்.

...டம் 13. ஜயவருஷ ஆவணி மீ
...சிகை 8. வர்ஷச்சந்தா ரூபாய் 3. AUGUST - 1954

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. ஸம்பாதகரின் குறிப்புக்கள் 224
2. செய்திகள் 226
3. யாரே அறிபவர் அவன் செய்யும் மாயங்களே 227
[ஸ்ரீ. உப. வித்வான், வேதாந்த வாவதூக, வில்லிவலம், நாராயணாசார்ய ஸ்வாமி, ந்யாயாத்யாபகர், ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருதகலாசாலை, மதுராந்தகம்.]
4. திருப்பாவைக்கதை 231
[ஸ்ரீ. உப. வித்வான், திருவரங்கம், திருமலைதாதாசார்யஸ்வாமி, M. O. L. திருப்பதி.]
5. யக்ஷ ப்ரச்னம் 235
[ஸ்ரீ. உப. வித்வான், அத்தி க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, தலைமை உபாத்யாயர், ஸ்ரீ அஹோபில்மடம் பாடசாலை, காஞ்சீபுரம்.]
6. தீயாரைக் காண்பதுவும் தீதே 239
[ஸ்ரீ .உப. ஒரகடம், கே. ஸுதர்சனாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]
7. புண்ணியனைப் பொன்மாதுடன் கண்ட பொய்கைப்பிரான் 241
[ஸ்ரீ. உப. வித்வான், ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]
8. உபய வேதாந்த ஐககண்டம் 244
[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்யஸ்வாமி, அட்வோகேட், M. A. B. L. திருச்சி.]
9. ஸ்ரீ பாகவதத்தில் சில தர்மங்கள் 247
[ஸ்ரீ. உப. வித்வான், தேரட்டாலம், வேணுகோபாலாசார்யஸ்வாமி, தலைமை உபாத்யாயர், ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை, பாதூர்.]
10. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் 250
11. திருமாலிருஞ்சோலை (அட்டைப்பட விளக்கம்) 253
[ஸ்ரீ. உப. D. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி, மதுரை.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 13 } ஜய ௵ ஆவணி ௴ { ஸஞ்சிகை 8

‘அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவஶாத் கல்பித ஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||’

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஸ்ரீ ந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||

ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா’ என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த ‘ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா’ என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योन्तःप्रविश्य ममवाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरण श्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

"देवं सेवितुमेव निश्चिनुमहे" என்பது ஸ்ரீ ஸ்வாமி ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் வாக்யம். இதனால் இவ்வுலக ஸுகத்தின் ஸ்திரமின்மையும் பரலோக ஸுகமான மோக்ஷத்தில் விருப்பமும் வெளிப்பட்டதாக ஆகிறது. பகவத் கைங்கர்யமே நமக்கு வேண்டுவது என்பதை ஸ்பஷ்டமாகக் குறிப்பிட்டுள்ளார் ஸ்ரீ ஸ்வாமி. ஸ்திரமில்லாத ஐச்வர்யத்தை வெறுத்த காலத்திலேதான் இக்கருத்து வெளியிடப்பட்டது. வைராக்ய நிதியாக ஸ்ரீவைஷ்ணவர்கள் விளங்க வேண்டுமென்பதல்லவா நமது ஆசார்ய ச்ரேஷ்டரின் நோக்கம். இதற்குகப்பவேதான் ஸ்ரீ வைஷ்ணவர்கள் தாஸ்யபாவம்பூண்டிருப்பதும். நமது கார்யங்களெல்லாம் ஸ்ரீமந்நாராயணன் உவப்புக்காகச் செய்யப் படுபவைகள் என்று ஸதா நாம் சொல்லிக்கொண்டிருப்பதல்லாமல் அநுஷ்டிக்கவும் முயற்சிக்கிறோம். பகவான்பக்தபராதீனனென்ற காரணத்தினால் பகவத்ஸேவநமென்பதுபக்தஸேவநமுமாகிறதல்லவா! நமதுபூர்வாசார்யர்களுடையசரித்ரங்களைக்கேட்கும்காலங்களில் பாகவதஸேவனத்திற்காக பல காலம்பாடுபட்டுள்ளார்கள் என்பது தெளிவு.

'देवमिव आचार्यमुपासीत' என்ற உபநிஷத்தால் பகவத் பக்திபோல் ஆசார்ய பக்தியும் நமக்கு அவச்யம் என ஏற்படுகிறது. பகவத் கைங்கர்ய மென்பது ஆசார்ய கைங்கர்யமுமாகும். ஆகவே நமது ஸித்தாந்த நோக்குகளை மனத்திற்கொண்டு அதன்படி நடத்தல் என்பது, ஸ்வாசார்ய, பகவத்பாகவத ஸேவனமே என்பது வ்யக்தமாகிறது. நமது ஸித்தாந்த ப்ரவசனமும், ப்ரசாரமும் நமது கடமைகள் என்று நமக்கு பூர்வாசார்யர்களால் விதிக்கப்பட்டவைகள். இக்கடமைகளை நிறைவேற்றுவதில் ஒருவருக்கொருவர் தாரதம்யம் ஏற்படலாம். ஶாஸ்த்ரஜ்ஞர்கள் ஶாஸ்த்ர ப்ரவசனம் செய்கிறார்கள். ஆசார்யர்கள் ஸாமான்யஶாஸ்த்ரங்களுடன் அத்யாத்ம ஶாஸ்த்ரங்களையும் ப்ரவசனம் செய்தருளுகிறார்கள். ஆசார்ய ஸ்தானங்களை வஹிக்காத சிலர் ஸாக்ஷாத்தாக ப்ரவசனம் செய்யாமையாலே ஸித்தாந்தங்களை ப்ரசாரப்படுத்தவும், ப்ரகாசப் படுத்தவும் மிகவும் உதவுகிறார்கள். ப்ரகாசப்படுத்துவதும் ஒருவித ப்ரவசனமே. இப்படி நமது ஸமூஹத்தில் உள்ள ஒவ்வொருவரும் நமக்கு ஏற்பட்ட ஸித்தாந்தத்தை ப்ரவசனம் செய்யவும், ப்ரகாசப்படுத்தவும் முன்வர வேண்டும் என்பது ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய விஷயமாகும். இப்படிச் செய்வதற்கு நம்மிடத்தில் சில ஆத்மகுணங்கள் அவச்யம். பூர்வாசார்யர்கள் ஜ்ஞானத்தினால் பெருமையை யடைந்திருந்தார்கள் என்பது மட்டுமல்லாமல், ஆத்மகுண பூர்த்தியாலும் பெருமையை அடைந்திருந்தார்கள் என்பது ஸ்பஷ்டம். 'परस्परहितैषिणां परिसरेषु मां वर्तय' என்று ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகன் ப்ரார்த்தித்தார் என்றால் நமது ஸமூஹத்தில் உள்ள ஒவ்வொருவரும் பரஸ்பர ஹிதத்தையே நோக்காகக் கொண்டவர்களாக இருத்தல் அவச்யமல்லவா! ஸமூஹ முன்னேற்றமே நமது நோக்கு; ஸித்தாந்த ப்ரவசனமும், ப்ரசாரமுமே நமது கொள்கை என்றுள்ள நாம் ஒவ்வொருவரும் மற்றவர்களும் அதேபோல்தான் என்று எண்ணுதல் அவச்யம். 'नहि सर्वः सर्वं जानाति' (எல்லோரும் எல்லா விஷயங்களையும் அறிகிறதில்லை) என்றபடி எல்லோரும் எல்லாவித ஶாஸ்த்ரங்களையும் அப்யஸித்தவர்களாக இருக்கமுடியாதல்லவா! அவரவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கேற்ப அவரவர்கள் பகவத் கைங்கர்யத்தில் ஈடுபடுகிறார்கள் என்பதை நாம் ஸந்தேஹிக்க வேண்டிய அவச்யமில்லையே! ஆதலால் நமக்குள்ஏற்றத்தாழ்வுள்ளதாக நாம் நினைக்கவேண்டிய அவச்யம் என்ன? நமக்குள் வைதிகர்கள், லௌகிகர்கள் என்ற பிரிவின்

கருத்துதான் என்ன? வைதிகர்கள் என வழங்கப்படுபவர்கள் லௌகிக அறிவையும் அதைச் சார்ந்த லௌகிக ஸம்பத்தையும் வெறுத்தவர்களா? லௌகிகர்கள் எனச் சொல்லப்படுபவர்கள் வைதிக தர்மத்தையும் வைதிக ச்ரத்தையையும் அறியாதவர்களா? வேதாத்யயனம் செய்தவர்களை வைதிகர்கள் என்றும் இதரர்களை லௌகிகர்களென்றும் கூறுவது ஒப்புக்கொள்ளக் கூடியதே. வ்யாகரண மஹாபாஷ்யகாரர் ஸம்மதப்படி வேதத்தில் காணப்படுவது வைதிகமாகவும் லோகத்தில் காணப்படுவது (வேதம் நீங்கலாக இதர விடங்களில்) லௌகிகம் என்றும் வ்யவஹரிக்கலாம் என்பது தெளிவு. ஆக வேதாத்யயனம் பூர்த்தியாகச்செய்யாமல் இதர ஶாஸ்த்ரங்களை மாத்திரம் அப்யஸித்தவர்கள் லௌகிகர்களெனக் கூறப்படுவதா? இப்படி பலவிதமான ப்ரச்னை ஏற்படுவதால் ஒவ்வொருவரும் தங்களையும், மற்றவர்களையும் குறித்து குண தோஷ நிரூபணம் செய்யும் காலத்தில் நன்கு பராமர்சித்துப் பார்க்கவேண்டும்.

இம்மாதிரி நிலை ஏற்படாததைக் கண்டுதான் நமது பூர்வாசார்யர்களும் வருந்துகிறார்கள்.

'पश्यति परेषु दोषानसतोऽपि सतोऽपि नैवगुणान्।
विपरीदमिदं स्वस्मिन् महिमा मोहांजनस्य एषा ॥'

என்ற ஆசார்ய ஸ்ரீ ஸூக்தி நமக்காகக் கூறப்பட்டதுதானே? அதாவது-பிறரிடம் இல்லாத தோஷங்களை இருப்பதாகஎண்ணுவதும் இருக்கும் குணங்களை மறப்பதும் அதற்கு மாறாக தன் ஸொந்த விஷயத்தில் (இருக்கும் தோஷங்களை மறந்து விடுவதும் அல்லது இல்லாத குணங்களையும் இருப்பதாகக் கருதுவதும்) இந்த உலக மாயையின் மகிமை, எனக் கூறும் வாக்யம் உபநிஷத் வாக்யம் போன்றதல்லவா? மாயையாவது-உலகத்தை ஸ்திர மில்லை என்றறிந்திருந்தும், தன் வாழ்க்கையில் ஒருவர் அதை பயன் படுத்தாமைதான். அதற்காக ஸந்தான, ஸம்பத், யசஸ் முதலியவைகளை விரும்புவதும் காலக்ரமத்தில் அவைகளை உடைய மற்றவர்களை வெறுப்பதும், அதன் மூலமாக தன் கௌரவத்தை அதிகம் அடைய முயற்சிப்பதும் உலக மாயையின் கூற்றே. கர்மவசத்தால் பீடிக்கப்பட்டு ஶாஸ்த்ரஜ்ஞர்கள்கூட இம்மாதிரி பொருளாதார நிலை கவர்ச்சியினால்தான் ஆத்ம குணத்தை இழப்பது. இம்மாதிரியான நிலையை பரிஹரிக்க ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்மன்தான் அருள் புரியவேண்டும்.

* * * * * *

ஸ்ரீமதழகியசிங்கரின் ஸங்கல்ப மஹோத்ஸவம்

நடந்த ஆனி மீ 31உ வியாழக்கிழமை (15-7-54) ஸ்ரீ அஹோபிலமடத்தில் 43-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மத்வேத மார்கேத்யாதிபிருதாலங்க்ருத ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவ ஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனின் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் மதுரைக்குச் சமீபத்திலுள்ள துவரிமான் அக்ரஹாரத்தில் நடைபெற்றது. அந்த க்ஷேத்திரமானது வைகையாற்றின் கரையில் அழகான சோலைகளின் மத்தியில் அமைந்திருப்பது போல் ஸ்ரீமத அஹோபிலமடத்தில் 40-வது பட்டத்தை அலங்கரித்த ஸ்ரீமத்வேத மார்கேத்யாதி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிஹ்ம திவ்யபாதுகா ஸேவக ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீரங்கநாதஶடகோபயதீந்த்ர மஹாதேசிகனின் ப்ருந்தாவனத்தினால் புனிதமானதாகும்.

மைஸூர் மஹாராஜா ஸ்ரீமதழகியசிங்கரின் கீர்த்தியைக்கண்டு பரம்பரையாவேவந்த பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீமதழகியசிங்கரை தெண்டம் ஸமர்ப்பிவித்து பாதகாணிக்கையாக ஓர் யானையையும் ஸமர்ப்பிவித்தார் என்பது நமது ஸஹ்ருதத்துக்களுக்கு முன்பே தெரியும். அந்த யானையானது அரசாங்க அதிகாரிகளாலேயே ஸ்ரீ ஸந்நிதி ஸ்ரீகார்யம் வித்வான், ஜோஸ்யம் ரங்காசார் ஸ்வாமியிடம் ஒப்புவிக்கப்பட்டு ஸங்கல்ப மஹோத்ஸவத்தன்று காலையில் துவரிமான் அக்ரஹாரத்தை யடைந்து அந்தப்புனித தினத்தில் ஸ்ரீ ந்ருஸிஹ்மனுடைய கைங்கர்யத்தை ஏற்றுக்கொண்டது.

பல தேசங்களிலிருந்தும் ஸ்ரீ அஹோபில மடத்து தேவஸ்தானமாகிய திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவஸ்வாமி தேவஸ்தானம் முதலிய பல தேவஸ்தானங்களிலிருந்தும் மாலை மரியாதைகளும் தகுந்த அதிகாரிகளால் கொண்டு வரப்பட்டன. அனேக ஆஸ்திக ப்ரமுகர்கள் ஸன்னிஹிதர்களாக இருந்து ஸ்ரீமதழகியசிங்கருடைய அநுக்ரஹத்திற்கும் ஸ்ரீ ந்ருஸிஹ்மனுடைய திவ்ய கடாக்ஷத்திற்கும் பாத்திரர்களானார்கள். உத்ஸவத்திற்குச் சென்று வந்தவர்கள் ஒவ்வொருவரும் 'கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியன கண்டோம்' என்று ஆனந்த பரவசத்தினால் வர்ணித்தார்கள்.

ஆவணி மீ முடிவில் நடக்கவிருக்கும் 'உத்தான' பர்யந்தம் ஸ்ரீ ந்ருஸிஹ்மனும், ஸ்ரீ அழகியசிங்கரும் அந்த க்ஷேத்ரத்தை புனிதமாக்குகிறார்களென்றால் என்னே அந்த க்ஷேத்ரத்தின் மஹிமை!

ஸ்ரீ:

செய்திகள்

ஸ்ரீ அஹோபிலமடம் பாடசாலை திறப்பு விழா ஸ்ரீரங்கம்.

ஸ்ரீ அழகியசிங்கரின் திவ்ய நியமனத்தின் பேரில் கீழ் உத்தர வீதியிலுள்ள ஸ்ரீஅஹோ பிலமடத்தில் 20-6-54 காலை 10-½ மணிக்கு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

பிரார்த்தனைக்குப் பிறகு ஸ்ரீ C. V. ராஜ கோபாலாசாரியர்(B. A. L. T.)ஸ்வாமி எல்லோரையும் வரவேற்றார்.

பிறகு இக்கூட்டத்திற்கு ஸ்ரீ. உப. அஹோபிலமடம் ஆஸ்தான வித்வான், தேசிகதர்சன விஜயத்வஜ புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி தலைமை வகித்தார். கீதாசார்யன் எல்லோரும் நல்லகதியடைய எவ்வளவு கஷ்டப்பட்டாரோ, அதேபோல் ஸ்ரீ அழகியசிங்கரும், நம் ஸமூஹத்தவர்கள் எல்லோரும் ஆசார சீலர்களாயும், ஸம்ஸ்க்ருதம் கற்றவர்களாயும் இருக்கவேண்டும் என்று திருவுள்ளம்பற்றி ஸ்ரீரங்கத்தில் இன்று இப்பாடசாலையை ஆரம்பித்தாயிருக்கிறது. இதைப் போல் பலவிடங்களில் பல பாடசாலைகள் நடைபெற்று வருகின்றன. இப்பாடசாலையில் படித்துத் தேரியவர்கள் இங்லீஷ் காலேஜுகளில் சேர யோக்யதை யுள்ளவர்களாகிறார்கள் என்று ஸர்க்காரால் அங்கீகரிக்கப் பட்டதாகவும் கேள்விப்படுகிறேன். ஆகையால் ஆஸ்திகர்களனைவரும் தங்கள் பிள்ளைகளை இப்பாடசாலையில் சேர்க்குமாறும், இப்பாடசாலையும், இப்பாடசாலையில் படிக்கும் மாணவர்களும் நன்குவ்ருத்தியடைய வேண்டும் என்று ஆசியும் கூறி தலைமை உரையை முடித்துக்கொண்டார்.

பிறகு ரிடைர்ட் ஜில்லா ஜட்ஜ் திவான் பஹதூர் ஸ்ரீ. S. ராகவ ஐயங்கார், ஸ்ரீ. A. நரஸிம்ஹ ஐயங்காரால் பாடசாலைக்கு அளிக்கப்பட்ட ஸ்ரீ அழகியசிங்கரின் படத்தை திறந்துவைத்துப் பேசுகையில் ஸ்ரீ அழகிய சிங்கர் செய்துவரும் லோகோபகாரங்களைப் பற்றியும் முக்யமாக இப்பாடசாலையின் உபகாரத்தைப்பற்றியும் விரிவாகப் பேசி நாம் எல்லோரும் கூடயிருந்து இதை நன்கு நடத்தித் தரவேண்டுமென்று ப்ரார்த்திப்ப தாகக் கூறினார்.

ஸ்ரீ. T. ராமஸ்வாமி அய்யங்கார் M. A. L. T. இந்தமாதிரி பாடசாலைகள் ஆரம்பித்து நடத்தும் நோக்கங்களையும் பாடசாலைகளில் உபாத்தியாயர்கள் நல்ல முறையில் பாடங்களை சொல்லிக் கொடுத்து ஸர்க்காரால் அங்கீகரிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்கள், பாடமுறைகள், ஸரியான காலம், வகுப்புக்கள், ஓய்வு நேரங்கள் எல்லாம் சரிவர நடந்துவரும் என்றும் உத்திரவாதம் செய்தார்.

ஸ்ரீ. G. க்ருஷ்ணமூர்த்தி M. L C அவர்கள் பிறகு இந்த பாடசாலைகளினால் அயல்நாட்டுப் பழக்க வழக்கங்கள் ஸுமார் 150 வருஷ காலமாக நம் மனத்திலும் தேகத்திலும் ஊறி இருப்பது மாறிவிடும் என்றும் முழு ஆங்கில போதனையை மாற்றவும் பழையகுருகுலத்தை பூர்ணமாகக்கொண்டு வர முடியாமலிருப்பதை ஒட்டி.இம் மாதிரி பாடசாலைகளில் நம் பையன்களையாவது 6 வயது முதல் 12 வயது வரையில் சேர்த்து நல்ல வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்றார். ஸர்க்காரால் பரிபூர்ண அங்கீகாரம் கிடைத்துவிடும் என்றும் அதற்குத் தன்னால் முடிந்தவரையில் பாடுபடுவதாகவும், இம்மாதிரி பாடசாலைகளை அபிவிருத்தி பண்ணவேண்டுமென்றும் சொன்னார். இந்திய அரசியல் அமைப்புப்படி சிறுபான்மையோருக்கு தங்கள் தர்மத்தைக் காப்பாற்றவும், மதங்களை வ்ருத்திபண்ணவும் அநுமதி உண்டென்றும் சொன்னார். மேலும்பழைய கால வழக்கப்படி, நவீந நாகரீகங்ளில் மோஹங்கொண்ட பெண்களையும் இந்த மாதிரி பாடசாலைகளால் மாற்ற முடியும் என்றார்.

பிறகு ரிடைர்ட் ஜட்ஜு ஸ்ரீ. L. S. பார்த்தஸாரதி அய்யர் அவர்கள் இந்தப் பாடசாலையின் நோக்கமும் இதனால் நவீந நாகரீகம் மாறி நம் ஸம்ப்ரதாயப் பழக்க வழக்கங்கள் முன்னுக்கு வரும் என்றும் சொல்லி நன்கு புத்திமதி கூறி பள்ளிக்கூடத்தை வ்ருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பாடசாலையை ஆரம்பித்து வைத்தார்.

அதுஸமயம் ஸ்ரீ. N. ராமஸ்வாமி அய்யங்கார் ஸ்வாமி இந்த மாதிரி பள்ளிக்கூடங்

(தொடர்ச்சி 230-ம் பக்கம்பார்க்க)

ஸ்ரீ:

'யாரே அறிபவர் அவன் செய்யும் மாயங்களே'

பொதுவிலேயே அவ்வப் பொழுது தாங்கள் உறும் கஷ்டங்களை பின்னடையாது ஏற்று, 'அவைகளும் ஒரு நன்மைக்காகவே' என்ற மனத் திருப்தியுடன் அவைகளை அநுபவிக்கும் ஆற்றலும், அதற்கு வேண்டிய மனப் பண்பும் நம் தேசத்தவர்களுக்கு நிறைய உண்டு. கஷ்டங்கள் அக்காலங்களில் கஷ்டங்களாகவே தோன்றினாலும் பிற்காலத்தில் ஆற அமர நாம் இருந்து யோசிக்கும் பொழுது அவற்றுள் ஈச்வர ஸங்கல்பத்தால் மறைந்து கிடக்கும் நன்மைகள் நமக்குப் புலனாகாமற் போகா. விவேகிகளாயுள்ள பேர்கள் முன்கூட்டியே இதை அறிந்து ஆபத்து நேர்ந்த பொழுதும் ஆறியே இருப்பர். 'விபத: ஸந்து ந: ஶஶ்வத் யாவத் ஸங்கீர்த்யதே ஹரி:' என்று குந்தீதேவி ஸ்ரீ கண்ணனிடம் வேண்டிக்கொண்டது ஜகத் ப்ரஸித்தம். 'வரில் பொடேன், கெடில் தேடேன்' என்று விபத்தின் விஷயத்தில் உதாஸீநமானப் போக்கேயன்றி, 'விபத்துக்கள் அடியோங்களுக்கு அடிக்கடி அவச்யம் நேரவேணடும்' என்று அபிமானத்துடன் அவைகளைப் பெற விரும்பினாள் அவள். காரணம்? ஆபத்துக்காலங்களில்தான் அவன் நினைவு நமக்கு வருகிறது என்பதுதான். ஆக, விபத்தினுடைய, தானான தன்மைக்குள்ளே 'பகவானை நினைக்க அவை ஹேதுவாகின்றன' என்கிற நல்ல அம்சம் ஒன்று ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது. அந்த அம்சத்தை வெளிப்படுத்தி புரிந்துகொண்டு ஆபத்துக்களை தைர்யத்துடன் சமாளிப்பதுதான் புத்திமான்கள் செய்யும் கார்யம்.

ஸ்ரீஸ்வாமி தேசிகனும் 'நாம் பண்ண பாபங்களை தைர்யத்துடனும், ஸந்தோஷத்துடனும் நாம் அனுபவிக்கவேண்டும்' என்று நமக்கு உபதேசிக்கும் பொழுது தமது க்ரந்தங்களில் 'ப்ராரப்தத்தின் சிகை (வ்ருத்தி அம்சம், வட்டி என்றபடி) அறுகிறது, என்று ஸந்தோஷிக்க ப்ராப்தம்' என்று பலகாலும் அருளிச் செய்வர். நாம் பாபபலன்களான கஷ்டநஷ்டங்களை அநுபவிக்கும் பொழுது அவைகளால் வேறு நன்மைகள் நமக்கு ஏற்படவுமாம். ஏற்படாதொழியவுமாம். ஆயினும் கடைசீ பக்ஷமாக அவைகளால் நமக்கு ஒரே ஒரு நன்மை மட்டும் தப்பாமல் கிட்டும். அஃதாவது— 'நாபுக்தம் க்ஷீயதே கர்ம' என்றபடி நாம் பாபபலங்களை அநுபவிக்க அநுபவிக்க அவைகளுக்குக் காரணமான பாபாம்சம் தொலைந்து காலியாகின்றதல்லவா? இது ஒரு நன்மை மட்டும் தீமைகள் அனைத்திலும் தொடர்ந்துவரும் பெரிய லாபமாகிறது நமக்கு. இதனாலேயே ப்ராரப்தத்தின் சிகை அறுகிறது என்று ஸாதித்தார் ஸ்ரீ ஸ்வாமி.

நமது முன்னோர்களுக்கு இருந்த இந்த அழகிய மனப்பான்மையை காளிதாஸ மஹாகவியின் வாயிலாகக் கேட்டுச் சிறிது அநுபவிக்கலாம். சப்தம் வந்த திக்கில், அது வந்தவழியே குறியாக, 'பாண ப்ரயோகம் செய்ய வல்ல ஸாமர்த்யம் பெற்றிருந்த தசரத மஹாராஜர் ஒருக்கால் ஸரயூ நதியின் 'தமது கையில் கொணர்ந்த குடத்தில் ஜலத்தை நிரப்பிக்கொண்டிருந்த ரிஷி குமாரன் பேரில் வெகு தொலைவிலிருந்து 'யானை தமது துதிக்கையால் நீரருந்தா நின்றது' என்று மயங்கி சப்தம் வந்த வழியே அம்பெய்தி அவனைத் தொலைத்த காதை அனைவரும் அறிந்ததே. பிறகு அக் குமாரனின் கடைசி வேண்டுகோளின்படி அங்கு தசரதரால் அழைத்து வரப்பட்ட அவனுடைய பெற்றோர்கள் பலவிதமாகப் புலம்பி கடைசீயில் தங்களது சினம் தீர தசரதனைச் சபித்தனர். 'எங்களுக்கு இப்பொழுது நேரப் போகிறபடியே உனக்கும் புத்ர சோகத்தால் ப்ராணவியோகம் நேரக்கடவது' என்று. இதைக்கேட்ட தசரதர் முதலில் திடுக்கிட்டாரே யாகிலும், பிறகு இச் சாபத்திலும் ஓர் நன்மை மறைந்து கிடப்பதை நிதானித்தறிந்து, மனந் தேறி சாபத்தை வரவேற்றுப் பேசினார், என்றான் மஹாகவி:—

𑌶𑌾𑌪𑍋𑌽𑌪𑍍𑌯𑌦𑍃𑌷𑍍𑌟𑌤𑌨𑌯𑌾𑌨𑌨𑌪𑌦𑍍𑌮𑌶𑍋𑌭𑍇
𑌸𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑍋 𑌭𑌗𑌵𑌤𑌾 𑌮𑌯𑌿 𑌪𑌾𑌤𑌿𑌤𑍋𑌽𑌯𑌂 ।
𑌕𑍃𑌷𑍍𑌯𑌾𑌂 𑌦𑌹𑌨𑍍𑌨𑌪𑌿 𑌖𑌲𑍁 𑌕𑍍𑌷𑌿𑌤𑌿𑌮𑌿𑌨𑍍𑌧𑌨𑍋𑌦𑍍𑌧𑍋
𑌬𑍀𑌜𑌪𑍍𑌰𑌰𑍋𑌹𑌜𑌨𑌨𑍀𑌂 𑌜𑍍𑌵𑌲𑌨𑌃 𑌕𑌰𑍋𑌤𑌿 ॥

𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌤𑌨𑌯𑌾𑌨𑌨𑌪𑌦𑍍𑌮𑌶𑍋𑌭𑍇𑌯𑌿-நான் எத்தகையவன்? வெகு நாள் கடந்தும் மதலையின் மலர்முகம்மலர்ந்து அதன் அழகைக்காணச்சிறிதும் பாக்யம் அற்றவன். அத்தகைய என்னிடத்தில் இங்ஙனம் ஒத்புதம்நிகழ்ந்திருக்கிறது. 𑌶𑌾𑌪𑍋𑌽𑌪𑍍𑌯𑌯𑌂 𑌸𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌃 𑌪𑌾𑌤𑌿𑌤𑌃– 'புத்ர சோகத்தால் உனக்கும் மரணம்' என்னும் இது மிக்க கொடிய சாபமே யாயினும் உம்மால் என்னிடம் இது இடிபோல் வீழ்த்தப் பெற்றதே யாயினும், கழுத்தில் நீட்டின கத்தி, கலம்பகன் மாலையாக விழுவது போல் பெரியதொரு அநுக்ரஹத்தைச்செய்துகொண்டே என்னிடம் வந்து வீழ்ந்துள்ளது. இச்சாபம் நிறைவேற வாகினும் எனக்குப் புத்திரன் உண்டாகவேணுமே. ஆகையால் இங்ஙனம் என்னைச் சபித்தவர் அநுக்ரஹித்தவராகவே ஆகிறீர். 𑌭𑌗𑌵𑌤𑌾—முக்காலமும் உணர்ந்த பெரியவரன்றோ நீர்! '𑌉𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌨𑌾𑌶𑌂 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌾𑌮𑌾𑌗𑌤𑌿𑌂 𑌗𑌤𑌿𑌂 । 𑌵𑍇𑌤𑍍𑌤𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌚 𑌸 𑌵𑌾𑌚𑍍𑌯𑍋 𑌭𑌗𑌵𑌾𑌨𑌿𑌤𑌿' என்றபடியன்றோ 'பகவான்' என்ற சொல்லின் பொருள் இருப்பது. 𑌕𑍃𑌷𑍍𑌯𑌾𑌮𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿– பயிர் செய்யும் குடிமக்கள் சிலகால் தமது விளை நிலங்களை தீ இட்டுக் கொளுத்துவர். ஆயினும் அதனால் கடைசியில் உண்டாவது நன்மையே. தீயிடுவதால் நன்கு பண்படுத்தப்பட்ட பூமி பிரம்பு, கரும்பு முதலியவைகளை முன்னிலும் அதிகமாக விளைவிக்க வல்லதாகுமாம். இதுவே சாபத் தீயினால் கொளுத்தப்பட்ட எனக்கு உதாஹரணம். 'பிள்ளையின் பிறப்பில் நிச்சயமின்றியிருந்த எனக்கு இச்சாபத்தின் மூலமாகவாகினும் அதில் நிச்சயமேற்பட்டது எனக்குப் பெருமகிழ்ச்சியே' என்றவாறு தசரதரின் அப்போதைய மனப்பான்மை இருந்தது என்று நாம் அறிகிறோம் மஹாகவி மூலமாய்.

ஆக இங்ஙனம் எத்துணைக்கஷ்டம் நாமநுபவிப்பினும் அதிலும் ஈச்வர ஸங்கல்பத்தால் ஓர் நன்மை கலந்தேயிருக்கும் என்று நாம் தெளியவேணும். இதைத்தான் நன்குணர்ந்த பெரியோர்கள் '𑌯𑌦𑍍𑌭𑌾𑌵𑌿 𑌤𑌦𑍍𑌭𑌵𑌤𑍁 𑌸𑌦𑌾 𑌭𑌦𑍍𑌰𑌾𑌣𑌿 𑌨𑌾𑌹𑌿𑌤𑌂 𑌕𑌾𑌰𑌯𑌤𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑌃' என்று கூறினர்கள். ஈச்வரனின் செயல்கள் சில ஸமயம் அஹிதங்கள் போலவும், பொருந்தாதவை போலவும், ப்ரயோஜன மற்றவை போலவும் தோன்றக்கூடும். ஆயினும் இது வெறும் தோற்றமே. உள்ளுறையாக அவன் செயல்கள் பரம ஹிதங்களாகவும், பொருத்த முள்ளனவாகவும், மிகப் பயன்படுவனவாகவும் யிருக்க, முடிவில் காணலாம். வழிகடந்து களைத்த ஒருவன் ஆலமர நிழலில் சிறிது தங்கி இளைப்பாறினதும், ஆங்கு அவன் படுத்தவாறே மேல் நோக்கின பொழுது ஆலின் சிறு பழங்களைக் கண்டு 'ஆகா! என்னே மதியீனம்? விறற்பெருமனே உடைய பூசணிக்கொடியில் குடம் போன்ற காய்களைப்படைத்த பகவான், அரசன் படையுடன் இருக்க இடமுடைத்தான ஆகாசமளாவிய ஆலமரத்துக்கு அணுவளவு காய்களைக் கல்பித்தது மிகவும் முரண்பட்டது. என்று நினைத்து அபசாரப்பட்டதும், அப்பொழுது அவன் மேல் தற்செயலாய் ஒரு ஆலம் பழம் விழவும், உடனேயே சிந்தை புரிந்தவனாய் 'ஐயோ! வீணில் கடவுளின் ஸ்ருஷ்டியைப் பழித்தேனே. இப்பொழுதல்லவோ விஷயம் விளங்குகிறது. பூசணிக்காய், கொடியில் தரையில் விளைவதால் தலையில் விழுந்து தீங்கு விளைவிக்க ப்ரஸக்தியில்லை. இம்மரமோ இளைப்பாறுமிடமாய் ஓங்கி வளர்ந்து இருப்பதால் இதன் காய்பழங்கள் பருத்து இருப்பின் ப்ரயாணிகளின் மேல் விழுந்து அவர்கள் தலை தப்ப வழியின்றிப் போகுமல்லவா. என்ன மதியூக!மென்றுஉண்மையறிந்துவருந்தினதும் சிறுவர் முதல் அனைவரும் அறிந்த கதையே.

ஸமீபத்தில் மிகப்பழைய பத்ரிகை ஒன்றை நாம் வாசிக்க நேர்ந்த பொழுது, இங்கெடுத்த விஷயமாய், அதில் ஒரு கதை வெளியாகி இருந்தது ஸாரஸமாகப் பட்டது. அதை இங்கு சுருங்க ப்ரஸ்தாவித்து முடிவிக்கு வந்து விடுகிறோம். கானகத்தில் கடும் தவம் புரியும் மஹரிஷி ஒருவருக்குச்சில நாட்களாககவே ஒரு சிந்தனை மனத்தில் ஓடிக்கொண்டிருந்தது. ஈச்வர சித்தம் உலகில் காணப்படும் செயல்களுள்

எவ்வாறு மறைந்திருக்கிறது? அவனை முன்னிருத்தி, அவன் செயலுக்குக் காரணம் கேட்டால், அவன் தன்னுலும், பதிலுரைக்கக் கூடுமா?' என்றவாறெல்லாம் மஹரிஷி சிந்தித்திருந்தார். ஒருநாள் இச்சிந்தனையினுல் தூண்டப்பட்டவராய் 'உலகில் இதன் தத்வம் காணவேணும்,' என்று, தேசஸஞ்சாரத்திற்கு புறப்பட்டுவிட்டார். முதலில் அவர் சென்ற வழியில் சிறிது தூரம் நடந்ததும் ஒருவழிப்போக்கன் அவருடன் சேர்ந்துகொண்டான். 'போகும் இடங்களில் உசாத்துணையாவான் அவன்,' என்று மஹரிஷி அவனை மித்ரனுக்கிக் கொண்டார். அதன் பிறகு சிறிது தூரத்தில் அவர்களுக்கு நடையினுல்களைப்பேற்பட்ட பொழுது எதிரில் ஒரு மாளிகை தென்பட்டது. அதற்குச் செல்லும் வழி மிகவும் அழகியதாய் சுத்தமாய் வைக்கப்பட்டு இருந்தது. 'நல்வரவாகுக' என்றெழுதப்பட்ட த்வஜத்துடன், தோரணமும் கட்டி, மாளிகையின் முக்யமான வாயில் மிளிர்ந்துகொண்டிருந்தது. இவர்கள் இருவரும் உள்ளே ப்ரவேசித்ததும் அவ்வீட்டு யஜமானன், தானே நேரில் வந்து இவர்களை உபசரித்து உள்ளே அழைத்துப் போனுன். அங்கு ஸகல போக பாக்யங்களுடன் ஓர் இரவு தங்கி இவர்கள் இளைப்பாறினுர்கள். மறுநாள் காலை இவர்கள் இருள் பிரியும் முன்பே அங்கிருந்து பயணமாயினர். கொஞ்ச தூரம் சென்றதும் வழியில் நன்ருகப் பொழுது புலர்ந்தது. அப்பொழுது மஹரிஷி தற்செயலாய் மித்ரன் மடியைப் பார்த்தார். ஓர் தங்கவட்டில் 'தகதக' வென்று, அதில் மறைந்து மின்னிக்கொண்டிருந்தது. முதல் நாள் இரவு அப் ப்ரபுவின் வீட்டில் படுக்கச் சென்றபொழுது அக்கிண்ணத்தில் அவர்களுக்குப் பருகப் பால் கொடுக்கப்பட்டது அவருக்கு நன்ருக நினைவிருந்தது. அடபாவி! இவ்வித நடத்தை உள்ளவனு நீ? என்று மனதில் நினைத்தவராய் வாய் திறந்து ஒன்றும் மொழியாமல் மௌனமாய் அவனுடன் நடந்து சென்ருர்.

அடுத்தாற்போல் அவர்கள் தங்கினது கஞ்சன் வீட்டில். இவர்கள் போனபொழுது ஸாயங்காலமாகி மழை பொழிய ஆகாசம் ஆயத்தம் செய்யும் ஆரவாரம் மிகுந்த ஸமயம். அந்த வீட்டுக்கதவு அடைத்திருந்தது. இவர்கள் தட்ட யாரோவந்து கதவைத் திறந்தார்கள். யாரையும் அங்கு வெளிப்படையாகக் காணேம். இவர்கள் இடைவிடாமல் கூப்பிட்ட பிறகு அந்த வீட்டு யஜமானன் அங்கு வந்து இவர்களுக்கு அந்த இரவு மட்டும் தங்குவதற்கு மாத்திரம் இடம் கொடுத்தான். இவர்களும் அங்கு தங்கி காலை புறப்பட்டனர். அச்சமயமே இந்த ஆச்சர்யம் நிகழ்ந்தது. மஹர்ஷியின் பேச்சுத்துணைவன் தன்மடியில் மறைத்துவைத்திருந்த தங்கவட்டிலை வெகுமதியாக வீட்டு யஜமானனுக்கு வழங்கினுன். மஹர்ஷி மறுபடி திடுக்கிட்டார். 'இவன் திருடன் என்பதுமட்டும் இல்லை, தெரிந்த லக்ஷணமும் இவ்வளவுதானிவனுக்கு என்று மனதில் நினைத்தாரேயன்றி வெளிப்படையாக ஒன்றும் கூறிற்றிலர். பொறுத்திருந்துபார்ப்போம் என்று அடக்கமாகவே அவனுடன் வழிநடந்தார். பகலெல்லாம் நடையில் சென்றது. மறுபடி ஸாயங்காலம் ஒரு வீட்டையடைந்தனர். அங்கும் ப்ரபுவாகிய அவ்வீட்டுக்குடையவன் ரொம்பவும் பக்தியுடன் இவர்களை உபசரித்தான். எஜமானனைவிட அவ்வீட்டு வேலைக்காரனெருவன் இவர்களை நன்கு கவனித்து தேவைகளைச்செய்து ஏவல் புரிந்தான். மறுநாட்காலை இவர்கள் புறப்பட்டபொழுது சிறிதுதூரத்தில் வழியில் குறுக்கிடும் காட்டாறு ஒன்றைக்கடக்க இவர்களுக்கு உதவும்பொருட்டு யஜமானனுத்திரவுபெற்று அந்த வேலையாள் கூடவந்தான். அவனுதவி செய்ய இவர்களும் ஆற்றைக்கடந்து வந்துகொண்டிருந்தனர். அங்கு ஆற்றின் நடுவில் ஆழமுள்ள ப்ரவாஹம் ஓடிக்கொண்டிருந்தது. சிறிது முன்னுல்மஹர்ஷியும், சிறிது பின்னுல் வேலையாளுடன் வழிப்போக்கனும் நடந்துகொண்டிருந்தஸமயம் அது. திடீரென்று சப்தங் கேட்கவே மஹர்ஷி புரிந்துபார்த்தார். வழிப்போக்கன்மட்டும் இருந்தான். திடுக்கிட்டு ப்ரவாஹத்தைப் பார்த்தபொழுது வேலைக்காரன் உடல் வெளிக்கிளம்புவதும் மறைவதுமாக வெள்ளத்தில்மிதந்துசென்றுகொண்டிருந்தது. முதலில் திருட்டுக்குற்றம்! பிறகு ஒரு க்ருபணனுக்கு திருட்டுச்சொத்தை வழங்குதல்! பின் துணைபுரிந்தவனுக்கு த்ரோஹம்புரிதல்! போதும் போதும். அவனுடன் ஒருநொடிப் பொழுதும் வஸிக்கலாகாது. இவனைச் சும்மா

விடவும் தகாது என்று மஹர்ஷி நினைத்தார் மனது கொதியிட்டது. 'வேலையாளுக்கு நேர்ந்த கதி உனக்கும் நேரட்டும்' என்று அவனையும் பிடித்து ஆற்றில் தள்ளிவிட்டார் மஹர்ஷி.

மறுக்ஷணம் ககனவீதியில் கதிராயிரம் இரவி கலந்து எரித்தாற்போல் சோதி வெள்ளமிட்டது. அச் சோதிவெள்ளத்துள் பரமபுருஷன் தோன்றி நின்றான். மஹர்ஷி ஹர்ஷ விஸ்மயங்களால் மயங்கி மௌனமாக நின்றார். தேவதேவனே திருமாடற்றோசைசெய்து திருவாய்மலர்ந்தருளினான். 'மஹர்ஷே! உமக்குத் துணைவனாக வந்த வழிப்போக்கன் நாம் அன்றி வேறு யாருமில்லை. நம் செயலின் அருமை பெருமைகளை உமக்கு உணர்த்தவே அவ்வாறு வந்து தோன்றினோம். உமக்குள்ள மயக்குகளை மாற்றுகிறோம், கேண்மின். முதல்வீட்டு யஜமானன், வந்த அதிதிகளை உபசரிப்பது தர்மார்த்தமாக; பகவத்ப்ரீதியை உத்தேசித்து அல்ல. வெறும் டாம்பிகன் அவன். 'படாடோபமாகச் செய்யும் செயலால் கடைசியில் நஷ்டமே உண்டாகும்' என்று அறிவுறுத்தவே பால் பருகக் கொடுத்தப் பசும்பொன் பாத்திரத்தையும் பதுக்கிவிட்டோம் நாம். பிறகு நாம் இருவரும் ஒரு க்ருபணனைச் சந்தித்தோம். அதிதிகளைச் சிறிதும் உபசரிக்காதவன் அவன். 'பிறருக்கு உதவி செய்து நாம் நஷ்டப்படுவானேன்' என்பது அவனது ஸித்தாந்தம். அவனுடைய அந்த எண்ணத்தை மாற்றிப் பிறருக்கு உதவினால் லாபமே உண்டாகும் என்று தெரிவிக்கவே பொன் வட்டிலை அவனுக்குப் பரிசாகத் தந்தோம். மூன்றாம் வீட்டுப் ப்ரபு, மிகுந்த யோக்யன், பரமதார்மிகன். அச்சுதனின் அநுக்ரஹம் பெறவே அதிதிகளை ஆராதிக்கும் ஆசாரமுள்ளவன். அவனிடம் வேலை செய்து வந்து இப்பொழுது ஆற்றோடு போன இந்த அயோக்யன் மிகுந்த யஜமானத்ரோஹி. இன்று இரவு தன் யஜமானனைக் கொன்று பொருள்களைக் களவு கொண்டு தேசாந்தரம் ஓடிவிட திட்டமிட்டிருந்தான். ஆகையால் இவனை நாம் முந்திக் கொண்டு தொலைத்துக்கட்டினோம். இங்ஙனமே எங்கும் நம் செயல்கள் இருக்குமாறு காணீர், பேதையர், பகுத்தறிவுபற்றிப் பேசும் பித்தர், முதலியோரே இவ்வுண்மையை உணரமாட்டாது உலகை ஏமாற்றித் திரிவர்' என்று திருவாய்மலர்ந்தருளினான் ஸர்வேச்வரன். மஹர்ஷியும் இவையெல்லாம் கேட்டு 'ஷூதொZஷூ ஹதவஸெநூஹ:' என்றபடி மனந்தெளிந்து மீண்டும் வந்து முன்போல் தவமியற்றலானார்.

இக் கதையின்படி 'எல்லாம் ஈச்வரஸங்கல்பத்தால் முடிவில் நன்மை பயப்பனவே என்று கொண்டு ஸந்துஷ்டியுடன் நாம் வாழவேண்டும்' என்ற படிப்பினை தேறி நிற்கிறது.

(226-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு தான் ரூ 4000 நன்கொடை அளித்துள்ளதாக அறிவித்தார். ஸ்ரீவலையப்பட்டி தாதாசாரியர் ஸ்வாமி இந்த ஸ்ரீரங்கம்பாடசாலைக்காக வருஷாவருஷம் ஸ்ரீ அழகியசிங்கர் நியமனப்படி செலவு செய்ய ரூ 100 கொடுப்பதாக ஒப்புக்கொண்டு இந்த வருஷத்திற்கு உடனே ரூ 100 நன்கொடை கொடுத்தார்.

A. நரஸிம்ஹ அய்யங்கார்.

மதுராந்தகம் ப்ரஹ்மோத்ஸவம்.

மதுராந்தகம் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய ப்ரஹ்மோத்ஸவம் நாளதுஜயவருஷ வைகாசி மீ 29உ வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஆனி மீ 7உ திங்கட்கிழமை முடிவடைந்தது. இந்த ப்ரஹ்மோத்ஸவத்தில் எழுந்தருளியிருந்த அத்யாபக வேத பாராயண ஸ்வாமிகளுக்கும், ஸேவார்த்தி ஸ்வாமிகளுக்கும் வழக்கம்போல் ததீயாராதனம் ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவ சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய அநுக்ரஹத்தால் ஸ்ரீ மதுராந்தகம் ஸ்ரீ அஹோபிலமடத்தில் இரண்டாவது உத்ஸவமான வைகாசி மீ 30உ சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு ஆனி மீ 7உ திங்கட்கிழமை வரையில் 10 நாட்களும் இரண்டு வேளையும் நடைபெற்றது. இந்த கைங்கர்யத்தில் ஸ்ரீ மதுராந்தகம் அக்ரஹார வாஸிகளாயும், அழிசூர் அக்ரஹார வாஸிகளாயும் உள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் ஒத்துழைப்பு மிகவும் பாராட்டத்தக்கது. இத்ததீயாராதனம் அநேகம் ஸ்வாமிகளாலும், மஹான்களாலும் த்ரவ்ய மூலமாகவும், அர்த்த மூலமாகவும் ஸஹாயம் செய்யப்பட்டு இனிது முடிவடைந்தது.

அன்னூர் ச. ராஜகோபாலாசார்யன்.

ஸ்ரீ:

திருப்பாவைக் கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஸ்ரீ கிருஷ்ணன் அவதரித்து நந்த கோகுலத்திற்குப் போனது முதல் அவரைக் கொல்வதற்காகக் கம்ஸன் செய்த முயற்சியினால் அவ்விடத்தில் பெரும்பெரும் அபாயங்கள்ஏற்பட்டு வந்ததைக்கண்ட நந்தர் அநிஷ்ட பரிஹாரார்த்தமாக வேத வித்துக்களான பெரியோர்களை ப்ரார்த்தித்து வரவழைத்துப் பல சாந்தி கர்மங்களைச் செய்து வந்தார். அந்த ஸமயங்களிலெல்லாம் தானங்களை ஏராளமாகச் செய்தார்.

'इति बालकमादाय सामर्ग्यंजुरुपाकृतैः ।
जलैः पवित्रौषधिभि रभिषिच्य द्विजोत्तमैः ॥
वाचयित्वा स्वस्त्ययनं नन्दगोपः समाहितः ।
हुत्वा चाग्निं द्विजातिभ्यः प्रादादन्नं महागुणम् ॥
गावः सर्वगुणोपेता वासः स्रग्रुक्ममालिनीः ।
आत्मजाभ्युदयार्थाय प्रादात् ते चान्वयुञ्जत ॥

என்று ஸ்ரீமத் பாகவதத்தில் கூறப்பட்டிருக்கிறது. 'இப்படி வெகு ச்ரத்தையோடு பல பல தான தர்மங்களைச் செய்து எவ்வித அபாயமுமில்லாமல் ஸ்ரீ கிருஷ்ணனைக் காப்பது அவன் நமக்கு வேண்டியதைச் செய்து நம்மைக் காப்பாற்றுவான் என்பதற்காகவே யன்றோ? ஆகையால் நீர் எழுந்திருந்து அவனை எங்களுக்குத் தந்தருளவேண்டு மென்றாள்.

நந்தகோபர் எழுந்து வந்து பெண்களைப் பார்த்து க்ஷேமம் விசாரித்துவிட்டு 'அப்படியே ஆகட்டும். குழந்தையை எழுப்பி அழைத்துப் போங்கள். கார்யம்முடிந்தவுடன் ஜாக்ரதையாய் திரும்பி வந்து சேருங்கள்" என்றார். அதன் பிறகு அவர் அனுமதியைப்பெற்று யசோதைப் பிராட்டி படுத்திருக்கும் இடத்திற்குச்சென்று அவளை எழுப்பினாள். முன்மாதிரியே இவளும் எழுந்திருந்து வந்து க்ருஷ்ணனை அழைத்துப்போக அனுமதிக்கவேண்டுமென்பது இப்பெண்களின் கருத்து. அதற்குத் தக்க ஔதார்யம் நந்தகோபருக்குப்போல் இவளுக்குமுண்டு என்பதை யறிந்திருந்த பெண்கள் இவளை எழுப்பும்போதும் அந்தக் குணத்தைச் சொல்ல விரும்புவது இயற்கை. அதனால்—

அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும்
எம்பெருமாட்டி யசோதா யறிவுறாய்

என்று இங்கும் அந்வயித்துக் கொள்ளவேண்டும். ஸ்திரீகளுக்கு பர்த்தாவுடன் சேர்ந்தே தர்மாநுஷ்டானத்தில் அதிகாரமென்பது ஸித்தாந்தமாயினும் அவர்களுக்கே ஸொந்தமான த்ரவ்யங்களைக்கொண்டு அவர்களே சில தான தர்மங்களைச் செய்யலாமென்பது கௌஸல்யை முதலியவர்களுடைய அநுஷ்டானத்தினால் தெரிகின்றது.

'नन्दस्य पत्नी कृतमज्जनादिकं
विप्रैः कृतस्वस्त्ययनं सुपूजितैः ।
अन्नाद्यवासःस्रगभीष्टधेनुभिः
संजातनिद्राक्षमशीशयच्छनैः ॥'

என்று யசோதையும் அன்ன வஸ்த்ராதிகளைக் கொடுத்ததாக ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லியிருக்கின்றது. இப்படி இருவருக்கும் பொதுவான ஔதார்ய குணமொன்றிருக்க அவ்விதமான மற்றொரு குணம் ஸ்வாமித்வமென்பது. அது இங்கு 'எம்பெருமாட்டி' என்று ஸ்பஷ்டமாய்ப் பேசப்பட்டது. இனி யசோதைக்கு மாத்திரமுள்ள விசேஷத்தைச் சொல்லிக் கூப்பிடுகின்றாள்-கொம்பனார்க்கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே—என்று. கொம்பனார் கொடி போன்றவர்கள். அதாவது—ஸ்த்ரீகள். ஸர்வலக்ஷணங்களும் பொருந்தி அழகாயிருக்கும் தேஹத்தைக் கொம்போடு ஒப்பிடுவது கவிகளின் வழக்கம். 'அங்கயஷ்டி:' என்பார்கள். கொம்பு சிறிதளவு கடினமானது. அதை ம்ருதுவாகப் பாவித்தால் அதுவே கொடியாம். இவ்வித உத்தம ஸ்த்ரீகளுக்கெல்லாம் யசோதை கொழுந்து போன்றவள். க்ருஷ்ணனைப் புத்திரனாகப் பெற்றுச் சீராட்டும் பாக்யமுள்ளவளாகையால் அவ்வித ஏற்றம் பெற்றவள் இவள்.

'किसलयमिव पाण्डुपत्राणाम्'

என்றான் உவமையிற் சிறந்த மஹாகவி. இப்படி க்ருஷ்ணனால் தன்னேற்றம் பெற்றாள். அதுமட்டுமல்ல. அப்புத்ரனைப் பெற்றுக் குலத்தையே விளங்கச் செய்தவள் இவள். ஸ்ரீ க்ருஷ்ணன் ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கு. அவனுக்கு மாதாவாகையால் இவளும் குலவிளக்கு. இப்படி இவளுக்குள்ள

199549

சிறப்புக்களைக் கூறிப் பிறகு அவள் பெயரை யே சொல்லி எழுப்பினாள்-அசோதாய் என்று. ஸஜாதீயரான ஸ்த்ரீகளுக்கும் குலத்துக்கும் புகழைத் தருமவள் என்று பொருள் நிரம்பிய பெயர் இது. யசஸ் என்னும் சொல் பரமாத்மா என்ற அர்த்தத்தில் உபநிஷத்தில் ப்ரயோ கிக்கப்பட்டிருக்கின்றது. அவனைப் புத்ரனாகப் பெற்று உலகத்திற்குக் கொடுத்தவளாதலின் 'யசோதா' என்ற பெயர் அவ்விதமாகவும் இவ ளிடத்தில் அர்த்தமுள்ள பெயராகின்றது.

இவ்வாறு தனக்குள்ள சிறப்புக்களைச் சொ ல்லி அப்பெண்களால் எழுப்பப்பட்ட யசோ தை உடனே விழித்தெழுந்து வந்து குளிரப் பேசிக் கொண்டாடி அவர்களிஷ்டப்படிச் செய் யலாமென்று அநுமதி கொடுத்தனுப்பினாள்.

அப்பெண்கள் க்ருஷ்ணனையே நினைத்துக் கொண்டு அவனை எப்பொழுது காண்போம் என்று துடித்துக்கொண்டிருந்தார்களாதலின் யசோதையின் படுக்கை யறையினின்று கிளம் பிய அவர்களில் பெரும்பாலோர் நேராக க்ருஷ் ணனுடைய பள்ளியறைக்கு விரைந்து ஓடிப் போய்

அம்பர மூடறுத் தோங்கி யுலகளந்த
உம்பர் கோமானே உறங்கா தெழுந்திராய்

என்று எம்பெருமானை எழுப்பினார்கள். மா தா பிதாக்களுக்குப் பிறகு தமயனான பல ராமனை எழுப்பி அதன் பிறகு க்ருஷ்ணனை யெழுப்பவேண்டியது முறை. இதை யறியாது தோழிகள் க்ருஷ்ணனைப் போய் எழுப்பினார் கள். இதை யறிந்த நாயகப்பெண் அவர்களை யெல்லாம் கூப்பிட்டு விஷயத்தை விளக்கமுடி யாதபடி அவ்வளவு வேகமாக அப்பெண்கள் ஓடி க்ருஷ்ணனை எழுப்பினார்கள். ஆயினும் தானும் விரைந்தோடி கையைத் தூக்கிப்பேசா மல் இருக்கும்படி ஸம்ஜ்ஞை செய்தாள். பெருத்த கோஷம் உடனே நின்று நிச்சப்தம் நிலவியது. பிறகு மெதுவாகப் பேசி நடந்த தவற்றை எல்லோருக்கும் அறிவித்தாள். எல் லோரும் அதை உணர்ந்து பச்சாத்தாபப்பட் டார்கள். பிறகு நாயகப் பெண் 'ஸரி. நடந் தது நடந்துவிட்டது. நாம் எழுப்பியதைக் கேட்டு ஸ்ரீ க்ருஷ்ணன் விழித்தெழுந்து வெளி யே வரவில்லை. ஆகையால் பலராமன் பள்ளி யறைக்குச்சென்று அவரை எழுப்பி ஸேவித்து விட்டு மறுபடியும் இங்கு வந்து க்ருஷ்ணனை எழுப்புவோம். வாருங்கள், அங்கே போவோம்' என்றாள். அதற்கு இசைந்து யாவரும் பின் தொடர பலராமன் பள்ளியறைக்கு அருகே சென்று 'பலதேவா உறங்கேல்' என்றாள். 'நீ பலமுள்ள தேவன், எங்களுடைய வ்ரதத்தி ற்கு யாராவது விரோதம் செய்வார்களாயின் அவர்களைத்தடுத்துநீ உதவவேண்டும். நேற்றுச் செய்த தீர்மானப்படி நாம் இங்கிருந்து இப் போதே புறப்படவேண்டும். ஆகையால் இனி நீ உறங்கக் கூடாது. விழித்து எழுந்திருந்து பாவைக் களம்போக ஆயத்தனயிரு' என்பது அவள் சொல்லின் கருத்து. இவ்வளவே சொன்னால் அதன் மேல் பலராமன் ஒன்று கேட்கக்கூடும்— 'தம்பி க்ருஷ்ணன் வராமல் நான் மாத்திரம் எங்கும் போவதில்லை யென் பது உங்களுக்குத் தெரிந்த விஷயமே. ஆகை யினால் அவனும் வரவேண்டும். அவனை எழுப் பினீர்களா?' என்று. இதற்கு ஸமாதானம் சொல்லக் கருதிய நாயகப்பெண் 'உம்பியும் நீயும் உறங்கேல்' என்றாள். இருவரையும் எழுப்பி அழைத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கின்றோம். முதலில் உன்க்குத் திருப் பள்ளியெழுச்சி பாடி ஸேவித்துவிட்டுப் பிறகு உன் தம்பிக்குத் திருப்பள்ளியெழுச்சி பாட உத்தேசித்திருக்கின்றோம். ஆகையால் நீ உறங்காதெழுந்திரு. உன்னை ஸேவித்துவிட்டு அங்கே போகின்றோம்' என்றாள். 'நீயும் உம் பியும்' என்ன வேண்டியவள் 'உம்பியும் நீயும்' என்று க்ரமத்தை மாற்றிச் சொல்லி 'இவ்வித மாக ஒரு தவறு இப்போது நேர்ந்து விட்டது' என்று குறிப்பாகக் காட்டி, 'இந்த அபராத பரிஹாரத்திற்காக அவருடைய திருவடியில் சரணாகதி பண்ணுகிறோம்' என்பதைச் 'செம் பொற்கழலடிச் செல்வா' என்று ஸம்போத னம் பண்ணிக் காட்டினாள். 'உயர்ந்த மாத் துள்ள நல்ல தங்கத்தினால் செய்த ஆபரண மணிந்த திருவடியை யுடைய சீமானே' என் பது அதன் பொருள். ஸர்வஜ்ஞ ஸம்பத் தையும் பெற்று விளங்குகின்ற உன்னுடைய இந்தத் திருவடியை சரணமாகப் பற்றுகின் றோம். அறிவில்லாத நாங்கள் செய்த குற்றத் தைப் பொறுத்துக்கொள்ளவேண்டும். உன் தம்பியினிடத்திலுள்ள வாத்ஸல்யத்தினால் நீ அதைப் பொருட்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் உனது தம்பி மூத்தவனான உன்னி டத்தில் நாங்கள் அபசாரப்பட்டதை ஸஹிக்க மாட்டான். ஆகையால் அவனையும் சாந்தப் படுத்தி நீயும் அநுக்ரஹம் செய்யவேண்டு' மென்பது இதில் அடங்கிய கருத்து.

இவ்வாறு இப்பெண்கள் எழுப்பியதைக் கேட்ட பலராமன் எழுந்து வந்து ‘எல்லாம் நீங்கள் சொன்னபடியே ஆகுக. ஒரு விதத்திலும் நீங்கள் சங்கைப்படவேண்டாம். ஒரு சிந்தையுமில்லாமல் ஸந்தோஷமாய்ப் போய் க்ருஷ்ணனை யெழுப்பி அழைத்து வாருங்கள்’ என்று மிகுந்த அன்புடன் சொல்லி அவர்களை அனுப்பினார்.

அரண்மனைக்குள் ப்ரவேசித்த பிறகு கோபகந்யகைகள் ஸ்ரீ க்ருஷ்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும் எழுப்புவதற்குமுன் பெரியோர்களை யெழுப்பியதைச் சொல்ல வந்தது இப்ப்ரகரணம். இங்கு ஸ்ரீ க்ருஷ்ணனை எழுப்பியதாகச் சொல்வதற்குச் சிறிதும் ஸங்கதியில்லை. ஆகிலும் நந்தகோபர் யசோதை பலராமன் ஆகிய இம்மூவரை மாத்ரம் எழுப்புவதாக வைத்து க்ருஷ்ணனுடைய ப்ரஸ்தாவமே இங்குச் செய்யப்படாமலிருந்தால் ஒவ்வொரு பாட்டும் பகவத் குணாநுஸந்தானமுள்ளதாக இருக்கவேண்டுமென்கிற நியமத்திற்கு பங்கம் வரும். ஆகையால் பால்யத்தில் ஸஹஜமாய் எல்லோருக்கும் ஏற்படக்கூடிய ஒருதவற்றை நிமித்தமாகவைத்து எம்பெருமானுடைய குணகீர்த்தனம் வெகு சமத்காரமாகச் செய்யப்பட்டிருக்கிறது. பரரூபத்திலிருந்து க்ருஷ்ணன் வரையில் என்று அவரோஹண க்ரமமாகவும் க்ருஷ்ணனிடத்திலிருந்து பரரூபம் வரையில் என்று ஆரோஹண க்ரமமாகவும் பகவத் குணாநுபவம் நடைபெறுகின்றது. அதில் முன் ‘மாயன்’ என்று ஆச்சர்ய சக்திவிசேஷமுள்ள பரரூபத்தைக் குறித்தபடியால் அவரோஹண க்ரமத்தில் இங்கு த்ரிவிக்ரமாவதாரச் சிறப்பைப் பேசினாள். ‘ஆகாசத்தைப் பிளந்து கொண்டு ஓங்கி வளர்ந்து உலகளந்து ப்ரஹ்மாவினாலும் சிவனாலும் பூஜிக்கப்பட்டு தேவாதிதேவனென்கிற தன் உண்மை நிலையை எல்லோரும் அறியும்படி செய்தருளிய பரமனே, நேற்று நாம் பேசிக்கொண்டபடி நாங்கள் வந்துவிட்டோம். ஆகையால் நீ இனித் தூங்காமல் எழுந்து வா’ என்று சொன்னதாயிற்று.

திருப்பாவைக் கதையில் வ்ருத்த
ப்ரபோதனம் அல்லது பெரி
யோரை எழுப்புதல் என்
கின்ற நான்காம் அதி
காரம் முற்றிற்று.

18. உந்து

பெரியோர்களுடைய அநுமதியைப் பெற்ற இடைப் பெண்கள் ஸ்ரீ க்ருஷ்ணனுடைய பள்ளியறைக்கு வந்துசேர்ந்தார்கள். இனி எம்பெருமானுக்குத் திருப்பள்ளியெழுச்சி பாடவேண்டும். ஆனால் அதற்கு முன் செய்யவேண்டிய தொன்றிருக்கின்றது. எம்பெருமான் தனியே பரதத்வமல்லன். ஸ்ரீமந்நாராயணனே பரதத்வமென்றன்றோ ஆசார்யர்கள் நிஷ்கர்ஷித்திருப்பது. உபாயமாக நாம் பற்றும் போதோ, பலமாக அநுபவிக்கும் போதோ, எல்லாத் தசையிலும் பிராட்டியோடு கூடின பகவான் உத்தேச்யனாகின்றான். ஆகையால் ப்ராக்ருதத்திலும் சயந க்ருஹத்தினுள் தனியாக க்ருஷ்ணனை மட்டும் வைத்துப் பேச பக்தர்கள் இசையார்கள். பகவத் பக்தியுள்ளவர்களுக்குள் உத்தமையான நாயகப் பெண் தனது சிறந்த அறிவிற்கும் பக்திக்கும் தக்கபடி திவ்யதம்பதிகளையே விரும்பிப்பாடி அநுபவிக்கப் புகுந்தாள். ‘யார் எப்படி என்னை அநுபவிக்க விரும்புகின்றார்களோ அவர்களுக்குஅப்படியே நான் ஸேவைஸாதிக்கின்றேன்’ என்கிற எம்பெருமானும் அப்போது பிராட்டியுடனேயே இருந்தான். இப்படி இருவராயிருந்தபடியால் பள்ளியறையின் கதவு உள்பக்கம் தாளிடப்பட்டிருந்தது. அறையின் முன்வந்து நின்ற பெண்கள் உள்ளே இருப்பவர்களை ப்ரார்த்தித்துக் கதவைத் திறக்கச் சொல்லவேண்டும். இவ்விஷயத்தை எம்பெருமானிடத்தில் ப்ரார்த்திப்பது எவ்விதத்திலும் உசிதமன்றாகையால் பிராட்டியையே அழைத்துப் பேசவேண்டியதாயிற்று. ஆகையால் முதலில் அவளையே ஸம்போதநம் பண்ணி ப்ரார்த்திக்கின்றார்கள்.

ஸ்ரீக்ருஷ்ணனோடப்போ தங்கிருந்த பிராட்டி நப்பின்னை. தன்னைத்தான்பெண்கள் அழைக்கின்றார்கள் என்பதை அவள் செவ்வையாய் உணர்வதற்காக அவள் பெயரைச் சொல்லிக் கூப்பிடவேண்டியது அவச்யம். ஆனால் அவளுக்குள்ள சிறப்பைச் சொல்லாமல் வெறும் பெயரை மட்டும் சொல்வது தகாது. எவ்விதமான சிறப்பைச்சொல்வது? ஸீதாபிராட்டி அநுமானிடத்தில் தன்னைப்பற்றிப் பேசும்போது முதலில் ‘சத்ருக்களுடைய ஸைந்யங்களையிருந்தவிடம்தெரியாமல்செய்கின்றவரான தசரத சக்ரவர்த்தியின் மருமகள் நான்’ என்று பெருமையாகப் பேசிக்கொண்டாள். இன்னா

ருடைய மணாட்டுப் பெண் என்று சொல்லிக் கொள்வது ஸ்த்ரீகளின் தன்மைக்கும் அவர்களுக்குத் தமது கணவர்களிடத்திலுள்ள பக்திக்கும் ஏற்றது என்கிற ஒரு ஸூக்ஷ்ம விஷயத்தை இங்கு ஸீதை உபதேசித்திருக்கின்றாள். இதையநுஸரித்து இங்கு இப் பெண்கள் **'நந்தகோபாலன் மருமகளே'** என்று அழைத்தார்கள். ஸீதையின் பேச்சில் தசரதர் வெகு பராக்ரமசாலி எனப்பட்டதுபோல் இங்கும் நந்தகோபாலர் மிகுந்த பராக்ரமமுள்ளவர் என்றார்கள் 'உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்' என்று. 'மதத்தைப் பெருக்குகின்ற யானை போன்றவன்' என்றவித்தால் சரீரபலம் கூறப்பட்டது. 'யுத்தத்தில் ஒரு போதும் பயந்து ஓடமாட்டான். அவ்வளவு புஜபலமுடையவன்' என்றவித்தால் சௌர்ய வீர்யங்கள் குறிக்கப்பட்டன. மிகுந்த சரீர பலமுள்ளவர்கள் பயங்காளிகளாகவும் சூரர்கள் துர்பல சரீரர்களாகவும் இருந்தால் அவர்களால் ஒரு பயனுமிராது. ஆகவே இரண்டும் கூறப்பட்டன. மதப் பெருக்குள்ள யானைகளை உடையவன் என்றும் கூறினாளாயிற்று. அப்போது **'गजान्तमैश्वर्यम्'** எனப்பட்ட ஐச்வர்யமும் சொன்னதாக ஆகின்றது. ஸீதாவாக்யத்தில் தசரதர் என்றதாலேயே மஹாராஜரான அவருடைய ஐச்வர்யம் தோன்றும். இப்படிப் பொருள் கொள்ளுபவர்கள் தோள்வலியன் என்றதாலேயே தேஹத்தின் வலுவும் கூறப்பட்டதெனக் கூறுவர். இவ்வளவு ஐச்வர்யமும் புஜபராக்ரமமுமுள்ள மாமனாரைப்படைத்த ஸ்த்ரீகளின் வாழ்க்கை மிகச் சிறந்த முறையில் நடக்குமாதலின் இதனால் அவர்கள் பெருமை கொள்வது தகும்.

வெகு புத்திசாலியான நாயகப் பெண் த்வாரபாலகனுக்கு ஸ்வாமியாகவும் ஸ்ரீ க்ருஷ்ணனுக்குப் பிதாவாகவும் உலகத்திற்குத் தாதாவாகவும் நப்பின்னைப்பிராட்டிக்குமாமனாராகவும் இருக்கும் நிலைகளை அநுஸரித்து ஒவ்வொன்றுக்கும் தக்கபடி நந்தகோபரை வர்ணித்திருப்பது ஸஹ்ருதயர்கள் மிகவும் ரஸித்துப் போற்ற வேண்டிய விஷயம்.

'………… वर्त एव च कर्मणि ॥
यदि ह्यहं न वर्तेयं ज़ातु कर्मण्यतन्द्रितः ।
मम वर्त्मानुवर्तन्ते मनुष्याः पार्थ सर्वशः ॥

என்று பகவான் சொன்னது பிராட்டிக்கும் ஸமானமாகையால் விடியும் ஸமயமான அக்காலத்தில் பிராட்டி எம்பெருமானுக்கு முன்னேயே விழித்தெழுந்திருந்து எம்பெருமான் எழுந்தவுடனே தான் அவனுக்குச் செய்யவேண்டிய சுச்ரூஷைகளுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருப்பாளென்று நிச்சயமாக எண்ணிய நாயகப்பெண் 'நப்பின்னாய்' என்று அழைத்த பின், பிராட்டி வந்து உடனே கதவைத் திறப்பாளென்றும் அதற்குச் சிறிது தாமதமாகுமானாலும் மறுமொழியாவது கூறுவாளென்றும் எதிர்பார்த்துச் சில நிமிஷங்கள் பேசாமலிருந்தாள். கதவும்திறக்கப்படவில்லை. மறுமொழியும்ஒன்றும்கூறப்படவில்லை. அதன் மேல் இவளுக்கு ஒருஸந்தேஹமுண்டாயிற்று. பர்த்தாவோடு பள்ளியறையில் தாம் இருப்பதைப் பிறர் அறிவதைச் சிறுவயதில் உள்ள பெண்கள் விரும்பமாட்டார்கள். அதில் மிகுந்த கூச்சமும் வெட்கமும் அவர்களுக் குண்டு. இப்படி உலக நடையில் இயற்கையாக உள்ள ஸங்கோசத்தினால் நப்பின்னை தான் உள்ளே இருப்பதைக் காட்டிக்கொள்ள விரும்பாமல், தான் அங்கு இல்லை என்பதாகவே கோபச் சிறுமிகள் எண்ணிக்கொள்ளட்டும் என்று கருதி மறுமொழி கூறாமலும் கதவைத் திறக்காமலும் இருக்கலாம், என்பது அவளுக்கு உண்டான ஸந்தேஹம். அதனால் 'நீ உள்ளே இருப்பதை நாங்கள் நிச்சயமாய் அறிகின்றோம். அதை நீ எவ்விதத்திலும் மறைக்கமுடியாது' என்று அறிவித்துக்கொண்டு மறுபடியும் கூப்பிட்டாள்—கந்தம் கமழும் குழலீ என்று. உயர்ந்த தைலம் தடவிப் பூ வைத்து முடிந்த கூந்தலின் பரிமளம் பள்ளியறை முழுவதுமேயன்றி வெளியிலுமன்றோ வெகு தூரம் வீசியிருக்கின்றது. இதை எவர் தடுக்கக் கூடும்? ஆகையால் நீ உள்ளே இல்லையென்பதாக நாங்கள் எண்ணும்படி செய்யும் முயற்சி வீண். நீ உள்ளே இருப்பது ஙங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் எங்களிடத்தில் உனக்கு ஸங்கோசம் எதற்காக? நீ வெட்கப்படவேண்டிய அவச்யமென்ன? உன்னைச் சேர்ந்த அந்தரங்கக் குழந்தைகளும் வேலைக்காரிகளுமன்றோ நாங்கள். உன்னுடைய கை கால்கள் போன்றவர்கள். ஆகையால் 'கதவைத் திற' என்றாள்.

(தொடரும்)

ஸ்ரீ:

யக்ஷப்ரச்னம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வேலைக்காரர்களுக்கு தானம் கொடுப்பது தனக்கு நன்றாக பணிவிடை செய்வதற்காக. அரசனுக்கு தானம் செய்வது (கப்பம் கட்டுவது) பயம் விடுவதற்காக.

யக்ஷன்—இந்த உலகத்திலுள்ள ஜனங்கள் அஜ்ஞர்களாக இருப்பதற்குக்காரணம் என்ன? எதனால் ஸ்நேகிதர்களை விடுகிறான்? ஏன் நல்லகதியை அடைவதில்லை?

தருமபுத்திரர்-மோஹத்தினால் அஜ்ஞர்களாக இருக்கிறார்கள். பேராசையினால் ஸ்நேகிதர்களை விடுகிறான். அஸத் ஸங்கத்தினால் நல்ல கதியை அடைவதில்லை.

யக்ஷன்-மனிதன் ஜீவித்திருந்த போதிலும் எதனால் இறந்தவனாகக் கருதப்படுகிறான்? எதனால் ராஜ்யம் நசிக்கிறது? ஶ்ராத்தம் எதனால் லோபத்தை அடைகிறது? யாகம் எதனால் பயனற்றதாகிறது?

தருமபுத்திரர் — மனிதன் ஜீவித்திருந்த போதிலும் தாரித்திரயத்தினால் இறந்தவனாகிறான். அரசனில்லாத போது ராஜ்யம் கொலை கொள்ளை முதலிய தீய சக்திகளால் பாதிக்கப்படுகிறது. வேதம் அல்லது வேதாந்தம் கற்காதவனை நிமந்த்ரணம் சொல்லிச் செய்யும் ஶ்ராத்தம் லோபத்தை அடையும். எந்த யாகத்தில் தக்ஷிணை கொடுக்கப்படவில்லையோ அந்த யாகம் பயனற்றதாகிறது.

யக்ஷன்—தபஸ் எதை லக்ஷணமாகக் கொண்டது? தமம் என்பது எது? க்ஷமா (பொறுமை) எப்படிப்பட்டது? வெட்கம் எப்படிப்பட்டது?

தருமபுத்திரர்-தபஸ் என்பது தன்னுடைய ஆஶ்ரமத்திற்கும், வர்ணத்திற்கும் உரியதான தர்மத்தை அனுஷ்டிப்பது. தமம் என்பது மனதை இஷ்டப்படி போகவிடாமல் தடுத்தல். க்ஷமா என்பது ஸுகதுக்கங்களை ஸஹிப்பது. வெட்கம் என்பது கெட்ட கார்யத்திலிருந்து விலகியிருத்தல்.

யக்ஷன்—எந்த ஜ்ஞானம் ஜ்ஞானமாகக் கருதப்படுகிறது? ஶமம் என்பது எது? தயா என்பது எது? ருஜுவான தன்மை என்பது எது?

தருமபுத்திரர்-தத்வங்களை அறிவதே ஜ்ஞானம். மனக்கவலையற்றிருக்கை ஶமம். அயலாருடைய துக்கத்தைப் போக்கவேணுமென்கிற இச்சை தயை. பகைவன், வேண்டியவன் என்று தரம் பாராதே எல்லோரிடத்திலும் ஒரே விதமான எண்ணத்தை உடையவனாக இருக்கும் தன்மை ஆர்ஜவம்.

யக்ஷன்—புருஷர்களுக்கு எந்த சத்ரு ஜயிக்க முடியாதவன்? எந்த வியாதிக்கு முடிவு இல்லை? எப்படிப்பட்ட ஸ்வபாவமுள்ளவன் ஸாதுவாகச் சொல்லப்படுகிறான்? எப்படிப்பட்டவன் துஷ்டனாகச் சொல்லப்படுகிறான்?

தருமபுத்திரர்—புருஷர்களால் ஜயிக்கமுடியாத சத்ரு கோபம். பேராசை என்கிற வியாதி முடிவு இல்லாதது. ஸர்வ பூதங்களிடத்தில் ஹிதபுத்தியுடையவன் ஸாது. தயையே இல்லாதவன் அஸாதுவாகச் சொல்லப்படுகிறான்.

யக்ஷன்—எது மோஹமென்று சொல்லப்படுகிறது? மானம் என்று எது சொல்லப்படுகிறது? ஆலஸ்யம் என்பது எது? சோகம் என்றால் என்னவென்று சொல்லப்படுகிறது?

தருமபுத்திரர்-மோஹம் என்பது—இது தர்மம் இது அதர்மம் என்கிற தர்மத்தின் ஸ்வரூபம் தெரியாமல் மூடனாக இருக்கும் தன்மை. தன்னுடையது என்கிற ஆத்மாபிமானம்தான் மானம். ஆலஸ்யம் (சோம்பல்) என்பது தர்ம ஹேதுவான கர்மாக்களைச் செய்யாமல் இருப்பது. அஜ்ஞானம் சோகமாகச் சொல்லப்படுகிறது.

யக்ஷன்— ஸ்திரமாக இருக்கை என்பது எதுவென்று ரிஷிகளால் சொல்லப்படுகிறது? தைர்யம் என்பது எதுவென்று சொல்லப்படுகிறது?

தருமபுத்திரர்—ஸ்வதர்மத்தை விடாமலிருப்பது ஸ்திரமாயிருக்கும் தன்மை. இந்திரியங்களை அடக்குவது தைர்யம்.

யக்ஷன்—எந்த மனிதன் பண்டிதனாக அறியப்படுகிறான்? மூர்க்கன் என்பவன் எவன்?

நாஸ்திகன் என்பவன் எவன்? மத்ஸரமென்பது எது?

தருமபுத்திரர்—தர்மாதர்ம ஜ்ஞானமுள்ளவன் பண்டிதனெனச் சொல்லப்படுகிறான். நாஸ்திகன் என்பவன் மூர்க்கன். பரலோகமென்பது கிடையாது என்கிற சார்வாக மதத்தினர் நாஸ்திகராகச்சொல்லப்படுகிறார்கள். ஹ்ருதயத்தின் தாபத்தை மத்ஸரமென்று ரிஷிகள் சொல்லுகிறார்கள்.

யக்ஷன்—தர்மம், அர்த்தம், காமம் இவைகள் ஒன்றுக்கொன்று விரோதிகள். நித்யம் விருத்தமான இவைகள் எப்படி ஓரிடத்தில் சேரும்?

தருமபுத்திரர்—எவனுக்கு தர்மமும், பத்நியும் தன் வசத்திலிருக்கிறார்களோ அவனிடத்தில் இம்மூன்றும் ஒன்று சேர்ந்திருக்கும்.

யக்ஷன்—ஹே குந்தியின்குமாரனே! இதற்கு மாத்திரம் சீக்கிரம் பதில் கூறு. அக்ஷயம் என்கிற நரகம் எவனால் அடையப் படுகிறது?

தருமபுத்திரர்—யாசகனான ஏழை ப்ராஹ்மணனை 'நான் தானம்கொடுக்கிறேன் வா' என்று தானாகவே கூப்பிட்டு பிறகு அவன் வந்தவாறே 'இல்லை' என்று எவன் சொல்லுகிறானோ அவன் அக்ஷய மென்கிற நரகத்தை அடைகிறான். எவன் வேதங்களையும், தர்மஶாஸ்த்ரங்களையும், தெய்வத்தையும் 'பொய்' என்று சொல்லுகிறானோ அவன் அக்ஷயம் என்கிற நரகத்தை அடைவான். எவனுக்கு தன் செலவிற்கும் போக அதிக தனம் இருந்த போதிலும் பேராசையினால் தானம் செய்யாமலும் தானும் அநுபவிக்காமலும் இருக்கிறானோ அவன் அக்ஷயம் என்கிற நரகத்தை அடைகிறான்.

யக்ஷன்—ப்ராஹ்மண்யம் எதனால் உண்டாகிறது? குலத்தினாலா? ஆசாரத்தினாலா? வேதாத்யனம் செய்வதினாலா? வேதாந்த வித்யையினாலா? என்று நிச்சயமாகச் சொல்லும்.

தருமபுத்திரர்—அத்யயனம் செய்வதினாலேலா, வேதாந்த வித்தையினாலேலா, குலத்தினாலோ, அல்ல. வ்ருத்தம் (ஆசாரம்) தான் காரணம். இதில் ஸம்சயமே வேண்டாம். ப்ராஹ்மணன் கஷ்டப்பட்டாவது அநுஷ்டானத்தைச் செய்ய வேண்டும். அநுஷ்டானமில்லாத ப்ராஹ்மணன் ஹதனாகவே கருதப்படுகிறான். எவ்வளவு ஶாஸ்த்ரங்களை கற்றபோதிலும் அநுஷ்டானம் இல்லாவிடில் மூர்க்கனாகவே ஆகிறான். நான்கு வேதங்களையும் அத்யயனம் செய்தவனாக இருந்தபோதிலும் அநுஷ்டானம் இல்லாதவன் ஶூத்திரனுக்கு ஸமமாக ஆகிறான். ஆகையால் அக்நிஹோத்ரம் முதலிய கர்மாக்களைச் செய்துகொண்டும் வெளி புலன்களையும் அடக்குகிறவன் ப்ராஹ்மணனாகிறான்.

யக்ஷன்—ப்ரியமான வார்த்தைச் சொல்லுகிறவன் எதை அடைகிறான்? நன்றாக ஆலோசித்துக்கார்யத்தைச்செய்கிறவன் எதை அடைகிறான்? அநேக ஜனங்களைத் தோழனாகக்கொண்டவன் எதை அடைகிறான்?

தருமபுத்திரர்—ப்ரியமாகப் பேசுகிறவன் எல்லோருக்கும் வேண்டியவனாகிறான். யோசித்துக்கார்யங்களைச்செய்கிறவன் எல்லா இடத்திலும் ஜயத்தை அடைகிறான். அநேகம் ஜனங்களைத் தோழனாகக் கொண்டவன் ஸுகமாக வஸிக்கிறான். தர்மத்தில் ஆஸக்தி உள்ளவன் நல்ல கதியை அடைகிறான்.

யக்ஷன் – எவன் ஸந்தோஷமுள்ளவனாகிறான்? எது ஆச்சர்யகரம்? எது ஸரியான வழி? எது ஸரியான ஸமாசாரம்? இந்நான்கு கேள்விகளுக்கு பதில் சொல்லிவிடும். உம்முடைய தம்பிகள் பிழைத்து விடுவார்கள்.

*தருமபுத்திரர்—எவன் கடன் வாங்காமலும் பிழைப்புக்காக தேசாந்திரம் போகாமலும் தன் வீட்டிலேயே ஐந்து அல்லது ஆறு தினங்களுக்கு ஒரு தரம் வீதம் காய்கறி சமைத்து புஜிக்கிறானோ அவன்தான் ஸந்தோஷமுள்ளவனாக ஆகிறான்.

N. B. காய்கறியுடன் ஸாப்பிடவேணும் என்கிற கருத்து இருந்தால் அப்பொழுது மேலே காட்டியபடி ஐந்து தினத்திற்கு ஒரு தரம் கடன் வாங்காமல் சாப்பிடலாம். எது ஸரியான ஸமாசாரம் என்கிற கேள்வி **'काचवार्तिका'** என்கிற ப்ரச்னத்தின் பொருள். உலகத்தில் பெரும்பாலும் ஜனங்களுக்குத் தெரியாத ஸமாசாரம் எது என்பது கேள்வியின் பொருள். இங்கு **'अज्ञाते'** என்கிற ஸூத்திரத்தினால் **कप्रत्ययम्** வந்திருக்கிறது.

ஒவ்வொரு தினம்தோறும் அநேக ப்ராணிகளும் மனிதர்களும் யமன் வீட்டிற்குச் செல்லுகின்றனர். அதைப் பார்த்துக் கொண்டிருக்கிற மற்றவர்கள் தாங்கள் இவ்வுலகில் ஸ்திரமாக இருக்கப் போகிறதாக நினைக்கிறார்கள். இதைக் காட்டிலும் என்ன ஆச்சர்ய மிருக்கிறது? நாம் எவ்வழியை பின்பற்ற வேண்டும் என்று யோசிக்கும் காலத்தில் தர்க்கத்தினால் ஊஹிக்க முடியாது. தர்க்கம் விமர்சனகாலத்தில் நிலைத்து இருக்காது. ச்ருதிகள் வெவ்வேறு மார்க்கத்தைக் கூறுகின்றன. ரிஷிகளே அநேகம்பேர் இருக்கிறார்கள். எவருடைய மதத்தைப்பின்பற்றுவது. தர்மத்தின் தத்வம்குஹையில் (ரஹஸ்யமான இடத்தில்) இருக்கிறது. ஆகையால் பெரியோர்கள் எவ்வழிசெல்லுகிறார்களோ அவ்வழியை நாம் பின்பற்ற வேண்டும். உலகத்தில் ஜனங்களுக்குப்பெரும்பாலாக தெரியாத ஸமாசாரம் இது. அதாவது–மஹா அஜ்ஞானமாகிற கடாஹத்தில் (பாத்திரத்தில்) ஸூர்யனாகிற அக்கினியினால் ராத்ரி பகல் என்கிற விறகுகளால் பூதங்களை (ப்ராணிகளை) மாஸம் ருதுக்கள் ஆகிற கரண்டியினால் யமன் சமைக்கிறான் என்பது.

யக்ஷன்–எல்லா கேள்விகளுக்கும் உன்னால் பதில் சொல்லியாகிவிட்டது. இப்பொழுது இரண்டு கேள்விகள் கேட்கப்படுகிறது. அதற்கு மாத்திரம் பதில் சொல்லும். அதாவது-புருஷர்களுக்குள் எவன் உயர்ந்தவன். எவன் எல்லாவற்றையும் தனமாக உடையவன்?

தருமபுத்திரர்–எவனுடைய புண்யகர்மாநுஷ்டானத்தினால் கீர்த்தி ஸ்வர்க்க லோகத்திலும், பூமியில் எல்லா இடங்களிலும் பரவுகிறதோ அவன் புருஷச்ரேஷ்டனாச்சொல்லப்படுகிறான். எவனுக்கு ப்ரியமும் அப்ரியமும் ஸமமாகஇருக்கிறதோ, எவனுக்கு ஸுக துக்கங்கள் ஸமமாக இருக்கிறதோ, எவனுக்கு எல்லாரிடத்திலும் ஸமத்வ புத்தி இருக்கிறதோ அவன் புருஷச்ரேஷ்டனாகிறான். பூதபவிஷ்யத் வர்த்தமான காலங்களில் ஆசையற்றவனாய், எப்பொழுதும் கோபமில்லாதவனாய், தெளிந்த மனத்துடன் பகவானை த்யானிக்கிறானே அவன் ஸர்வதநீயன்.

யக்ஷன்–என்னுடைய எல்லா கேள்விகளுக்கும் பதில் சொல்லிவிட்டீர். ஆகையால் உம்முடைய தம்பிகளுக்குள் ஒருவனைத்தான் பிழைக்கும்படி செய்வேன். உமக்கு யார் இஷ்டமானவன்? சொல்லும்.

தருமபுத்திரர்— கருத்த நிறமுள்ளவனும் சிவந்த கண்ணுள்ளவனுமான நகுலன் ஜீவக்கவேண்டும்.

யக்ஷன்—மஹாவ்யாபகர்களான பீமன், அர்ஜுனன் இவர்கள் இருக்க நகுலனை மாத்திரம் கேட்டதின் மர்மம் என்ன?

தருமபுத்திரர்—நாம் தர்மத்தை ரக்ஷித்தால் தர்மம் நம்மை ரக்ஷிக்கும். அதைப் போலவே அதை நாம்கொன்றால் (அநுஷ்டிக்காவிட்டால்) அது நம்மை விட்டுவிடும்.

'धर्मएव हतो हन्ति धर्मो रक्षति रक्षितः' ஆகையால் தர்மத்தைநான் விடமாட்டேன். எனக்கு எல்லாப் பொருள்களைக் காட்டிலும் ஆந்ருசம்ஸ்யம் க்ரூரனா யில்லாமலிருப்பதுதான் முக்ய தர்மமாகக் கருதுகிறேன். என் தகப்பனாருக்கு இரண்டு பத்நிகள். குந்தீ என்பவளுக்கு புத்திரனை நான் ஜீவித்து இருக்கிறேன். மாத்ரீ என்பவளுக்காக நகுலன் ஜீவிக்கவேண்டும். எனக்கு குந்தீ என்பவள் வேறாகவும் மாத்ரீ என்பவள் வேறாகவும் தோன்றவில்லை. ஆகையால் நகுலனை ஜீவிக்கவேண்டும்.

யக்ஷன் — தர்மாதர்மத்தைக்காட்டிலும், ஆந்ருசம்ஸ்யம் க்ரூரனாக யில்லாமல் இருப்பது தான் உயர்ந்தது. என்று சொன்னதை நான் ஒப்புக்கொள்கிறேன். என்னுடைய கேள்விகளுக்கு த்ருப்திகரமாக பதில் செல்லிவிட்டதால் உம்முடைய தம்பிகள் எல்லோரும் பிழைத்து விடுவார்கள்.

யக்ஷன் வார்த்தை சொல்லி முடிந்தவுடன் தம்பிகள் நான்கு பேரும் எழுந்து விட்டார்கள். அவர்கள் எல்லோருக்கும் தாகம் சாந்தியாய் விட்டது. அப்பொழுது தருமபுத்திரர் யக்ஷனைப்பார்த்து "நீர் யார் என்பது எனக்கு இன்னும் புலப்படவில்லை. யக்ஷனாக இருக்க முடியாது என்பது என் அபிப்ராயம். இப்படிப்பட்ட மஹாபராக்ரம சாலிகளான என் தம்பி

களை கொன்றவனை இதுவரையில் பார்த்ததில்லை. என் தம்பிகளும் ஸுகமாக தூங்கி எழுந்த மாதிரி யிருக்கிறபடியால் இப்படிச் செய்த நீர் எங்களுக்குத் தோழனுகவோ, அல்லது எங்களுக்குத் தகப்பனுகவோ இருக்கவேண்டும். உண்மையைச் சொல்லும்.'

யக்ஷன்— நான் உன் பிதா. உன்னைப் பரீக்ஷிப்பதற்காக இக்காட்டிற்கு வந்தேன். உன்னிடத்தில் ஸத்யம், தமம், சமம், தர்மம் முதலிய நல்ல குணங்கள் இருப்பதைக் கண்டு ஸந்தோஷிக்கிறேன். உனக்கு என்ன வரம் வேண்டும் தருகிறேன் கேள்.

தருமபுத்திரர் —'அரணிக் கட்டைகளுடன் கூடிய அக்னிஹோத்ரியின்பாண்டத்தை ம்ருகம் கொண்டு போய்விட்டது அதைத் திருப்பி வாங்கித் தரவேண்டும். அக்னிஹோத்திரியின் அக்னிகளும் நாச மடையாமல் இருக்கவேண்டும்' இதுதான் என்னுடைய முதல் வரம்.

யக்ஷன்— 'நான்தான் ம்ருக வேஷம்கொண்டு அங்கு சென்று பாண்டத்தை எடுத்துச் சென்றேன். இதோ வாங்கிக்கொள்' என்று சொல்லி பாண்டத்தைக் கொடுத்து வேறுவரம் கேள் என்று நியமித்தார்.

தருமபுத்திரர்-'நாங்கள் பன்னிரண்டுவருஷ காலம் காட்டில் வஸித்து விட்டோம். இனி ஒரு வருஷ காலம் அஜ்ஞாத வாஸம் செய்ய வேண்டியிருக்கிறது. அந்த காலத்தில் எங்களை ஒருவரும் அறியாமல் இருக்கும்படி வரம் கொடுக்கவேணும்.

யக்ஷன்—'என் அநுக்ரஹத்தினுல் நீங்கள் உங்களுக்கு இஷ்டமான ரூபத்தை எடுத்துக் கொண்டு விராடநகரத்தில் வாழ்வீர்களாக. உங்களை ஒருவரும் அறியமாட்டார்கள்' என்று சொல்லி ஸந்தோஷாதிசயத்தினுல் இன்னெரு வரம் கேட்கும்படி சொன்னுர். அப்பொழுது தருமபுத்திரரும் 'எனக்கு காம க்ரோத லோபாதிகளை ஜயிக்கக்கூடிய சக்தியையும் தானத்திலும், தபஸ்ஸிலும், ஸத்யத்திலும் என் மனது எப்பொழுதும் ஸ்திரமாக இருக்கும்படியும் வரம்கொடும்' என்று கேட்டார். பிறகு யக்ஷரூபனுன யமனும் 'உன் இஷ்டப்படியே உண்டாகுக' என்று சொல்லிமறைந்தார். தருமபுத்திராதிகளும் அரணிக் கட்டையுடன் கூடிய பாண்டத்தை அக்னிஹோத்ரியிடம் கொடுத்துவிட்டு வேறு இடத்திற்குச் சென்றுர்கள்.

संस्काराः परमुत्सवैक वपुषस्सन्ध्याविनोदावधिः
सावित्रीजनवादजर्झरतनुश्शौचन्नट प्रायिकम् ।
इत्थं मोहमहीपतेरनुमते विश्वं विपर्यस्यतः
कालस्यैष कले रलेपकमतव्यक्तक्रमः प्रक्रमः ॥

(ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்)

[இக்கலியில் உபநயநாதி ஸம்ஸ்காரங்கள், வாத்ய கச்சேரி, பாட்டு கச்சேரி, முதலியவைகளை ப்ரதானமாகவுடையதாகவும், விநோதார்த்தம் ஸந்த்யோபாஸனமும், காயத்ரீ ஜபம், ஊர் பேச்சு முடிவு பர்யந்தமாயும், சௌசம் நடந ப்ராயிகமாயும் (அபிநயம்) நடக்கிறது. இப்படி மஹாமோஹனுக்கு அபிமதமான விஷயத்தில் உலகை தலைகீழாகச் செய்கிற கலிகாலத்தினுடைய ஆசாரம் அலேபகர்களுடைய மதத்தில் அடிவைப்பை உடையதாயிருக்கிறது.]

ஸ்ரீ:

'தீயாரைக் காண்பதுவும் தீதே'

தலைப்பிற் காணப்படும் 'தீயார்' எனும்சொல், பாவத்தை விளைவிக்கும் தீய கார்யங்களைச் செய்தோர் யாவரையும் பொதுவாகக் குறிக்குமாயினும், இங்குப் பாஷண்டிகளைச் சிறப்பாக உணர்த்தும் சொல்லாகக் கொள்ளவேண்டும். 'பாஷண்டிகள்' என்றால் வேத ஶாஸ்த்ர மார்க்கங்களைத் துறந்த பாவிகள். அவர்களோடு நாம் ஸம்பாஷிக்கலாகாது. மற்றைக் காலங்களில் சிறிது ஸம்பாஷணம் செய்தாலும், வைதிகாநுஷ்டாநகாலத்தில் விஶேஷமாய் அவர்களோடு பேசுவதையும், அவர்களைப் பார்ப்பதையும் அறவே விடவேண்டும். பாஷண்டரை நேசித்து அவர் சோற்றை உண்பதும், அவரைத் தன் வீட்டில் உண்பிப்பதும், அவரோடு சேர்ந்திருத்தலும் ஆகா. கடவுளில்லை யென்பவரும் அடியாரைப் பழிப்பவரும், வேதத்தை நிந்திப்பவரும், யாதொரு பயனுமின்றி வீணுக்குச் சடைவளர்ப்பவரும், முண்டிதம்செய்து கொள்பவரும் * பகவந்நிவேதநம் செய்யாமலே சோற்றை உண்பவரும், த்ரிகரணங்களாலும் சுத்தியற்றவரும், பித்ருக்களுக்குப் பிண்டோதகங்களிடாமல் தவிர்ப்பவரும் மஹாபாபிகள் எனப்படுவர். இவர்களோடு ஸஹவாஸம் முற்றும் விடத்தக்கது. இதனை விளக்கப் பராசரர் மயித்திரேயருக்குக்கூறிய கதை யொன்றுண்டு. அதனைச் சிறிது விளக்குவோம்.

முற்காலத்தில் 'சததனு' என்று ப்ரஸித்தனான அரசனொருவன் இருந்தான். அவனுக்கு மஹாபதிவ்ரதையான மனைவியொருத்திஉண்டு. அவள் ஸகலகுணஸம்பந்நையாய், ஸர்வலக்ஷணங்களும் கொண்டவளா யிருந்தாள். அவன் தன் பத்நியுடன் ஜபங்கள், ஹோமங்கள், தானங்கள் உபவாஸங்கள், அர்ச்சனைகள் முதலியவற்றால் தேவதேவனான ஸ்ரீமந்நாராயணனை ஆராதித்து வந்தான்.

இப்படியிருக்க அவ்வரச தம்பதிகள் ஒரு கார்த்திகை ஏகாதசியில் உபவாஸமிருந்து கங்கா நதியில் தீர்த்தமாடிக் கரை யேறினார்கள். அப்போது ஒரு பாஷண்டி இவர்கள் எதிரே வந்தான். அப்போது ராஜபத்நி அவனைத் தற்செயலாகப் பார்த்து அவனுடன் பேசாமல் மௌனமாயிருந்து, அவனைப் பார்த்த தோஷம் நீங்குவதற்கு ஸூர்ய தர்ஶநம் செய்தாள். அவ்வரசனோ, தனக்கு வில் வித்தை கற்பித்த ஆசிரியனுக்கு அப்பாஷண்டி ஸ்நேகன் என்ற காரணத்தால் அவனிடம் சற்றுக் கௌரவம் வைத்துத் தாக்ஷிண்யத்தால் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தான். பேச்சு முடிந்ததும், அவன் தன் மனைவியோடு அரண்மனைக்கு வந்து வழக்கப்படி எம்பெருமானுக்குத் திருவாராதனம் செய்தான். கால க்ரமத்தில் அவ்வரசன் மரணமடைய அவளும் அவனோடு உடன் கட்டை யேறினாள். பின்பு அவ்வரசன் உபவாஸ வ்ரதத்திலே பாஷண்ட ஸம்பாஷணம் செய்த அபசாரத்தாலே நாயாகப் பிறந்தான். அந்த ராஜபத்நியோ காசிராஜாவின் புத்ரியாய்ப் பிறந்து, கல்வித் தேர்ச்சி யுடையவளாய்ப் பூர்வ ஜன்ம ஜ்ஞாநமும் உள்ளவளாயிருந்தாள். அவளுக்கு விவாஹத்துக் குரிய பருவம் நெருங்கவே, அவளுடைய பிதா, தக்க வரனைத் தேடி அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்க முயற்சித்துக் கொண்டிருக்கையில், அந்தப் பெண் தனக்கு இப்போது விவாஹம் வேண்டா மென்று அவனுடைய முயற்சியைத் தடுத்துவிட்டாள். பின்பு, அவள் தன் கணவன் 'விதிசை' என்ற நகரத்தில் நாயாய் இருப்

---

* 'மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த(து) ஒழித்து விடின்.'
[திருக்குறள்; கூடாவொழுக்கம், 28-ம் அதிகாரம் செய்யுள்-10]

பதைத் தன் திவ்ய ஜ்ஞானத்தால் அறிந்துகொண்டு, தினம் அந்த நகரத்துக்குப்போய், தன் பர்த்தாவான அந்த நாய்க்கு அன்போடும் மரியாதையோடும் நல்ல உணவுகளைக் கொடுத்துப் போற்றி வந்தாள். அந்த நாய் அவள் கொடுக்கும் உணவுகளை உண்டு, வெகு ஸந்தோஷத்தாலே தன் சாதி இயல்பின்படி வாலாட்டிக்கொண்டு அவளிடம் தன் பணிவைக் காட்டி வந்தது. அதைக்கண்ட அவ்விராஜ குமாரி, அந் நாயை வணங்கி 'ஐயா! மஹாராஜவே! நீர் முற்பிறப்பில் உபவாஸ தினமாகிய ஒரு ஏகாதசி யன்று, கங்கா ஸ்நாநம் செய்தபின் ஒரு பாஷண்டியோடு தாக்ஷிண்யத்தினல் பேசினீ ரன்றோ? அந்தப்பாபத்தாலல்லவா இந்த ஈனமான நாய்ப் பிறப்பெடுத்து எனக்கு வணக்கம் செய்ய நேர்ந்தது? இதனை நன்றாய் யோசித்துப் பாரும்' என்றாள். அப்பெண் இவ்வாறு நினைப்பூட்டியதும் அவனுக்குத் தன் சரித்ரம் நினைவுக்குவர, மிகுந்த வெறுப்பும் லஜ்ஜையும் கொண்டவனாய், அந்நகரை விட்டு வெளிப் போந்து ஒரு மலை யுச்சியை யடைந்து அங்கு நின்றும் கீழே விழுந்து தன் உடலை மாய்த்து மீண்டும் நரிப்பிறப்பை யடைந்தான். பின்பு அவ்விராஜ கன்னிகை தன் ஜ்ஞானத்ருஷ்டியினாலே தன் புருஷனுக்கு நேர்ந்துள்ள நரிப் பிறப்பை உணர்ந்து, பாஷண்ட ஸம்பாஷணத்தால் நேர்ந்தவற்றை அவனுக்கு உணர்த்தினாள். அதுகேட்ட அந்த நரி மனக்கஷ்டத்தால் இரையெடுக்காமலே பட்டினியிருந்து உயிர் துறந்து, மீண்டும் அக்காட்டிலேயே செந்நாயாய்ப் பிறந்தது. அக்கன்னிகை அதனை உணர்ந்து, அச் செந்நாயைத் தேடிக் கண்டுபிடித்து, முற்கூறியபடியே அவன் செய்த பாபத்தைத்தெரிவித்தாள். அரசனும் தன் பூர்வ ஜனனங்களை உணர்ந்து செந்நாய் உடலை நீத்துக் கழுகாகப் பிறந்தான். அதன் பின்னர் அவன் இப்படியே காக்கையாகவும் கொக்காகவும் மயிலாகவும் பிறந்தான். அவனது பிறப்புக்களைக் கண்டறிந்த அப்பதிவ்ரதை, அவனது ஒவ்வொரு பிறப்பிலும், பாஷண்ட ஸம்பாஷணத்தால் நேர்ந்த பாபத்தை ஞாபக மூட்டிக்கொண்டே வந்தாள். அவ்வேந்தன் தான் எடுத்த ஜனன வரிசைகளை யெல்லாம் நினைத்து நினைத்துத் துயருற்றுத் தன் சரீரத்தை விட்டுக் கடைசியாக விதேஹ தேசத்தில் ஜனகமஹாராஜனுக்குப் புத்திரனாய்ப் பிறந்தான்.

அவன் தன் பிதாவின் க்ருஹத்தில் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து யௌவனப் பருவம் அடைந்தான். அப்போது அக்காசிராஜன் மகளாகிய அக்கந்நிகை, தன் விவாஹ விருப்பைத் தன் பிதாவுக்கு அறிவிக்க, அக்காசிவேந்தனும் சுயம்வரம் கோடித்து பல தேசத்தரசர்க்கும் மணவோலைப் போக்கினன். அரசர் யாவரும் மண மண்டபத்தில் தத்தம் ஆஸனங்களில் அமர்ந்தனர். அவ்வரச குமாரர்களுக்குள் விதேஹ ராஜகுமாரனை தன் கணவனையே அவள் வரித்து மணமாலை சூட்ட, அவ்விருவருக்கும் திருமணம் வெகு சிறப்பாக நடைபெற்றது. அப் பெண்மணி தன் கணவனுடன் ஸகல போகபாக்யங்களையும் அநுபவித்துக்கொண்டு வெகு காலம் வாழ்ந்து வந்தாள். காலக்ரமத்தில் தன் தந்தை ஸ்வர்க்க மடையவே அந்த அரசன் விதேஹ நாட்டுக்கு அரசனாகி, அநேக அரசர்களை வென்று திறை பெற்று, பலயாகங்களைச் செய்து, தானங்களையும் வழங்கி, புத்திரரையும் பெற்று நீதியாய் அரசாட்சி செய்து ஒருயுத்தத்தில் உயிரிழந்து ஸ்வர்க்கமடைந்தான். அவன் பத்னி அப்போதும் அவனோடுஉடன் கட்டை யேறினாள். அவ்விருவரும் ஒருவரை யொருவர் பிரியாமல் அக்ஷயமான புண்யலோகம் பெற்றார்கள்.

ஆதலின்,

'தீயாரைக் காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார் சொற் கேட்பதுவும் தீதே—தீயார்
குணங்க ளுரைப்பதுவும் தீதே யவரோ(டு)
இணங்கி யிருப்பதுவும் தீது.'

समवृत्ति रुपैति मार्दवं समये यश्च तनोति तिग्मतां ।
अधितिष्ठति लोकमोजसा स विवस्वानिव मेदिनीपतिः ॥

ஸ்ரீ:

புண்ணியனைப் பொன்மாதுடன் கண்ட பொய்கைப் பிரான்

பாட்டுக்குரிய பழையவர் மூவரில் முதன்மை பூண்டவரும், மறையின் குருத்தின் பொருளையும் செந்தமிழ் தன்னையும் கூட்டி அழியாவிளக்கேற்றி அருந்தமிழ் நூற்றந்தாதி படி விளங்கச் செய்தவருமான பொய்கையாழ்வார், நடுநாட்டிலுள்ளதும் தமிழ்ப்பாட்டுமுதன் முதலில் பூவுலகில் தோன்றியவிடமுமான திருக்கோவிலூரில் மிருகண்டு முனிவரின் ஆச்ரமத்து இடைகழியில் பூதத்தாழ்வார் பேயாழ்வார் ஆகியோருடன் எம்பெருமானாகிய அவனியளந்த அண்டர் கோமானை ஸாக்ஷாத்கரித்த பின் மற்றொரு பொழுதில் அவ்வெம்பெருமானை மங்களாஸாஸனம் செய்துகொண்டு நிற்கிறார். அப்பொழுது அவ்வெம்பெருமானது திருவிளையாடல்களில் மனம் ஒன்றுபட்டுச் சிந்தை கசிந்துருக அவனுடைய அருமை பெருமை எளிமை ஆகியவற்றை அந்தந்த குணங்களை எடுத்துக்காட்டும் திருவவதாரலீலாம்ருதங்களை ப்ரத்யக்ஷமாக ஸேவித்துக் கொண்டே அநுபவிக்கிறார். அப்படியே அவனது திருமேனியில் வைத்த கண் வாங்காமலும், வாங்க முடியாமலும், வாங்க முயலாமலும் நிற்கிறார். ஆழ்வாருடைய பரஜ்ஞான பரம பக்திகளைக்கண்ட மாயன் தமது அர்ச்சாவதார ஸமாதியைக் கடந்து இவருடன் பேச நினைக்கிறார். பேசவும் பேசுகிறார்.

பகவான்—என் அப்படி என்னைப் பார்க்கிறீர்?

பொய்கையாழ்வார்—'நின்றாய்.'

பகவான்—நிற்காமல் என்ன செய்வது? உமக்கும் உமது ஆப்தர்களுக்கும் எமது நிலையைக் காட்டவே வந்தேன். உங்களைக் காணவே நின்றேன். இன்னும் நிற்கிறேன். அதனால் என்னை இன்னும் உலகிலுள்ள மற்றவரும் காணலாமல்லவோ?

இதைக் கேட்ட ஆழ்வார் சிந்திக்கலானார். 'ஆஹா என்னே இவன் பெருமை? இவன் பெருமை அளவு கடந்ததுதான். ஆனால் இவனுடைய மார்வகத்தில் வீற்றிருக்கும் திருமகள் இவனைக் காட்டிலும் பெருமை யுடையவள். இவனுடைய பெருமை இவ்வளவினதென்று ஓரளவு சுட்டிக்காட்டிப் பேசும்படி இவன் நமக்கு அருள் புரிந்திருக்கிறான். ஆனால் அத்திருமகளுடைய பெருமை அவ்வண்ணம் அறிவதற்கு இயலாதது. இவனே நித்ய யௌவனத்துடன்தான் விளங்குகிறான். ஆனால் அத்திருமகள் இவனைக்காட்டிலும் பன்மடங்கு இளமையாகத் தோற்றுகிறாள். இவனோ ஸாக்ஷாத் மன்மத மன்மதன். ஆனால் அத்திருமகளோவெனில் அழகேயோர் வடிவெடுத்தது போல் தோற்றுகிறாள். எம்பெருமான் அருள் நிரம்ப உடையவன்தான். ஆனால் திருமகளோ அருளின் உருவாகவே தோன்றுகிறாள். மேலும் எங்கே சென்றாலும் எந்த அவதாரம் செய்தாலும் எப்பொழுதும் இவனைப் பிரியாமலேயே சேர்ந்து நின்று அருள்புரிகிறாள். நரசிங்கமாக அவதரித்த பொழுதும் விட்டு நீங்கினாளில்லை. வாமனனாக வந்த பொழுதும் விட்டு நகர்ந்து இருந்தாளென்பதில்லை. அவளை மார்பில் கொண்டிருத்தல் தமது ப்ரஹ்மசரிய வ்ரத வேஷத்திற்குப் பொருத்தமில்லாவிட்டால் என் செய்வது என்று நினைத்து எம்பெருமான் தானே சற்று இறங்குகிறாயா என்று கேட்டாலும் அவள் நீங்க நினைக்கவுமில்லை. இப்படி அவ்வரவிந்த மங்கையுடன் என்றும் நீங்காத இவ்வெம்பெருமான் என்னையும் ஒரு காலும் பிரிந்தவனில்லை. என்னுடன் எப்போதும் எங்கும் நிலையாக நின்று அருள் புரிகிறான். அவ்வப் பொழுதும் அத்திருமகளும் அருள் புரிகிறாள். எந்த ஸமயத்திலும் எங்கேயும் இவர்களில் ஒருவரைச் சொன்னால் இவ்விருவரும் சேர்ந்த ஒரு மிதுனமே உத்தேச்யமென்பதை விளக்கிக் காட்டவேயோ இவர்கள் இவ்வண்ணம் சேர்ந்து நிற்பது? இஃதல்லாமலும் இன்னுமொரு விசேஷமல்லவா இங்கு தெரிகி

றது? தனது ஜகத் ஸ்ருஷ்டி முதலிய வ்யாபாரங்களை விட்டு விட்டு ஏதோ தாக்ஷிண்யத்திற்குக்கட்டுப்பட்டு நிற்பதுபோல் இருக்கிறது பகவான் நிற்கிறது. ஆனால் பிராட்டியோவெனில் இனி வேறோர் இடம் அறியேன், இதை விட்டு நீங்கேன் என்பதை அறுதியிடுவதைப் போலல்லவா ஸ்திரமாக அமர்ந்து புன்முறுவல் செய்கிறாள். பின்னுமோர் விசேஷமும் தெரிகிறதே இங்கு. இந்த பெருமானுக்கு நடப்பதற்கு இடமேது? ஓரிடத்தில் ஒரே ஸமயத்தில் இரண்டு பாதங்களையும் சேர்த்து நிற்பதற்கும் இயலாமல் ஒரே பாதத்தை ஊன்றி பிறிதோர் பாதத்தை மேலே தூக்கி நிமிர்த்தி அகில உலகமும் நிறைபப் பேருருவமாய் நிமிர்ந்த திருமேனியுடையவனல்லவோ இவன். இவன் இந்நிலையில் நிற்காமல் பின் என்னதான் செய்யமுடியும்? ஆகா! இவ்வெம்பெருமானும் அத்திருமகளும் இதுவரையில் இருந்து வந்ததைப் போலவே இனியும், என்றுமே இவ்விடத்தையும் என்னையும் விட்டு நீங்காது நிற்பர் என்பதற்கு ஏதேனும் தடையுமுளதோ? கிடையாது' என்று எண்ணினார் ஆழ்வார்.

ஆழ்வார—'நீயும் திருமகளும் நின்றாயால்.'

பகவான்—'நீயும் என்று சுட்டிப் பேசுகின்றீரே. என்னை நீர் நன்றாக அறிவீரா? எனது குணங்களை நன்றாக அறிவீரா? நானும் திருமகளும் பிரிவிதில்லை என்பதையும் அறிவீரா? இருக்கட்டும். நாங்கள் அப்படிப் பிரியாமல் இருந்து ஆச்ரிதர்களைப் பற்றியிருத்தலால் யாருக்கு என்ன நன்மை என்பதையும் அறிவீரா?'

மறுபடியும் ஆழ்வார் சிந்திக்கலுற்றார். 'இவனைமுற்றும் அறியவியலாததுதான். ஆனால் திருமகளின் பெருமையையறிவதைவிட இவன் பெருமையை யறிவது சிறிதாவது எளிதாகுமல்லவா? அவள் இவனுக்கும் பெருமை கொடுப்பவளல்லவா? இவன் குணங்களை எப்படி அளவிடுவது? இவனுடைய ஒவ்வோர் லீலாம்ருதமாகிய சரித்திரமுமே இவனுடைய அளவற்ற கல்யாண குணங்களை வெளியிடுமே. குன்றத்தைக் குடையாகப் பிடித்துப் பெருமழையினின்றும் ஆயரையும், ஆனிரையையும் காத்தது ஒன்றே எத்தனை கல்யாண குணங்களை வெளியிடுகின்றது? எவ்வளவு நற்குணங்களைப் பலருக்கும் உண்டாக்கியிருக்கிறது அச்செயல்? ஸர்வாந்தர்யாமி ஸ்ரீமந்நாராயணனென்றும், இந்திரனுக்குப் பூஜை செய்வதைக் காட்டிலும் கோவர்த்தன மலைக்குங்கூட அந்தர்யாமியாகிய ஸ்ரீமந்நாரயணனுக்கே பூஜை செய்வது உத்தமமென்றும், நம்பிக்கையுடன் பற்றினால் எங்குமுள்ள நாராயணன் இரங்கியருள் புரிவான் என்றும், அவனை யடைந்தவர்களுக்கு இந்திராதி தேவர்கள் முயன்றாலும் கேடு விளைவித்தல் அரிது என்பதும் முதலான அனேக நுட்பமான பொருள்களை அனைவரும் உணருமாறு காட்டிய திருவிளையாடல் அது. முடிவில் இந்திரனும் தன் தவற்றை யுணர்ந்து தனது அறியாமைக்கு மன்னிப்புக் கோரிய செயலல்லவா அது? ஆனிரையையும், ஆயரையும் பாய்ந்து அடித்துக்கொண்டு போகும் பரந்த வெள்ளத்திற்கு ஏது வானதும், பாய்ந்து ஓடிவந்ததுமான மழையைத் தடுக்கப்பாய்ந்து ஓடிக் குன்றத்தைக் குடையாக வெடுத்த உதாரச் செயல்தான் என்னே? மேலும் இந்திரன் கடுமழையை ஏவினனே யல்லது மாயன் அதை மழையாகவே நினைக்கவில்லையே. பனியைத் தடுப்பது போலல்லவோ சிரமமின்றித் தடுத்தான்' என்று இவைகளை நினைத்துருகிய ஆழ்வார் பேசுகிறார்—

ஆழ்வார்—குன்றெடுத்துப் பாயும் பனி மறைத்த பண்பாளா. ஆழ்வாருடைய மனோபாவத்தையும், பக்தியின் பரீவாஹத்தையும், ஜ்ஞாநமஹார்ணவத்தையும் உகக்கிறார் பகவான். பிறகு—

பகவான்—அஃது அப்படியேயிருக்கட்டும். நான் நின்றதிலோ, திருமகளுடன் சேர்ந்திருந்ததிலோ வியப்புக் கிடம் என்ன விருக்கிறது? அது எனக்கு இயல்புதானே? குன்றமெடுத்ததற்கும் இங்கே நாம் நின்றதற்கும் பொருத்தம் யாது? ஆழ்வாருடைய சிந்தனை மறுபடியும் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. 'உலகங்களைக் காக்கவே திருமகளும் தானுமாகச் சேர்ந்து நிற்கும் பரமன் உலகமெல்லாம் மாவலியிடமகப்பட்டு வருந்தும் போது அவனிடமிருந்து சேதனர்க்கு உண்டாகும் பயத்தைத்

தவிர்த்து முழுவதையும் அருள் செய்து ஆட்
கொண்டு எங்கும் வ்யாபித்துத் திருமகளும்
தானுமாக நின்றான். அப்படியே இந்திரனு
டைய மழையைப் பார்த்து நடுங்கிய ஆயரை
யும், ஆனிரையையும் கருணையுடன் அருளி
குன்றைக் குடையாக வேந்திக்காத்தான். அப்
படியே பாபமும் பயமுமாகிய சுழல்கள் நிறை
ந்த ஸம்ஸாரமாகிய ப்ரவாஹம் வந்து சுற்றி
யிழுத்துப் போகாதிருக்கவேண்டு மென்று
விரும்பிய என்னையும் என்னுடைய ஸுஹ்ரு
ருத்துக்களையும் அருள் கொடுத்து இக்கோவி
லிடைகழியை யடைந்து எங்களிடையே புகு
ந்து நெருக்கி நின்றருளினான். அன்று குன்
றெடுத்து ஆனிரைக் காத்ததைப் போலவே
இன்றும் ஆச்ரிதர்களுடைய ரக்ஷண பரத்தை
ஏற்றுக்கொண்டு நிற்கிறான். அது மாத்திரமா?
உலக முற்றும் வளர்ந்தளந்தருளிய திருமேனி
முழுதும் அந்த இடைகழிக்குள்ளேயே யமை
ந்து எங்களுக்குக்காட்டி யருள் புரிந்தானல்
லவா? வளர்ச்சியின் காரணமாக தமது அவய
மேதேனும் அவ்விடைகழியைவிட்டு வெளியே
சிறிதும் செல்லாமலும், தமது வளர்த்தியால்
நாங்களும் அவ்விடைகழியை விட்டு வெளியி
லோ உள்ளிலோ சிறிதும் தள்ளப்படாமலும்
எங்களையும் அங்கேயே நிறுத்தி தமது திவ்யா
வயவ ஸௌந்தர்யத்தைக் கண்பித்தானல்லவா?
முன்னொரு காலத்திலே தனது குழந்தை, பக்
தன் ஆகியவர்களின் உண்மையைக்காப்பாற்று
வதற்காக ஓர் தூணிலே தோன்றி உள்ளேயு
மில்லாமல் வெளியேயும் செல்லாமல் வாயிற்
படியிலேயே நின்று செயற்கரியசெயல் புரிந்து
தனது பரத்வம் ஸௌலப்யம் ஸர்வஶக்தத்வம்
ஸர்வாந்தர்யாமித்வம் முதலியவைகளை வெளிப்
படுத்தியவனல்லவா? அப்படியே இப்பொழு
தும் ஓர் இடைகழியிலமர்ந்து நின்று சொலற்
கரிய நினைப்பரிய செயலற்கரியவைகளைக் காட்
டியருளுகிறான் போலும். இனியும் இதை
விட்டுப் போக மனமில்லையன்றோவவனுக்கு?
பரமனுக்கும் பிரிய மனம்துணியாத அளவுக்கு
அழகுடையது போலும் இவ்விடைகழி!'
என்று சிந்தித்த பொய்கையாழ்வார்—

ஆழ்வார்—'வாசல் கடைகழியாவுள் புகா
காமர் பூங்கோவல் இடைகழியே பற்றியினி.'
இனி முழுப்பாசுரமும் வருமாறு—

'நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்
பாயும் பனிமறைத்த பண்பாளா—வாசல்
கடைகழியாவுள்புகா காமர் பூங்கோவல்
இடைகழியே பற்றியினி.'

இப்பாசுரத்தில் பெருக்கெடுத்தோடும் சொன்
னயத்தினால் தோன்றும் பொருள் நயம் பற்றி
இக்கட்டுரை எழுதப்பட்டது. பெரியோர்கள்
தவறாகக் கொள்ளமாட்டார்களென நம்பி இஃ
தெழுதப்பட்டது. மேலும் இப்பாட்டுக்கு
உள்ளுறை பொருளாகப் பின்வருமாறு உரைப்
பர் சான்றோர். அதாவது—வீடு என்பது
மோக்ஷமாய் அதையடையும் முக்த தசையைக்
குறிப்பதாகவும், வீட்டின் இடைகழியை
(ரேழி) முக்தனாவதற்கு முன்னுள்ள முமுக்ஷு
தசையைக் குறிப்பதாகவும், வீட்டுக்கு வெளிப்
புறமாகிய வாசலை ஸதாசார்ய கடாக்ஷம் பெ
றாத பத்த தசையைக் குறிப்பதாகவும்; மோக்ஷ
மார்க்கத்தில் மிக ஆதரமுடைய முமுக்ஷுக்க
ளுக்கு திருமகளுடன் சேர்ந்த பரம புருஷன்
என்றும் அநுபவிக்கக் கிடைப்பன் என்றும்;
அவன் அவர்களுக்கு மிக ஸுலபன் என்றும்
இப்பாசுரத்தில் தெளிவாகத் தெரிவதாகப்
பெரியோர் கூறுவர். என்னே ஆழ்வார்களின்
சிறப்பு! என்னே யவர் ப்ரபந்தங்களின் அமு
தப் பெருக்கு!!

குறிப்பு:—திருமகள்—லக்ஷ்மி, அழகின் வடிவமான இளம் பெண், செல்வத்தை யருளும்பெண்;
நின்றாய்—படர்க்கையை உளப்படுத்திய முன்னிலை வினை; பனிமறை, பனித்துளி; பாயும்-பாய்
கிற, பெருகிய, பாய்ந்த; பண்பாளா—குணத்தை யுடையோனே, குணத்தால் ஆள்பவனே,
குணத்தை யாள்பவனே, குணமுடையோரை யாள்பவனே; வாசல் கடை கழிதல்—வாயிற்
படியைத் தாண்டி வெளியேறுதல்; காமர்—அழகிய; பற்றி—பிடித்து; நீங்காது; நின்று; உம்
என்ற இடைச்சொல் ஒழிந்தவற்றைக் கூட்டும். நீயும் திருமகளும் என்று சொல்வதினால்
அவர்கள் நிற்பதை என்றுங்கூடவே நின்றுகாணும் தன்னையும் தானே நமக்கு உணர்த்துகிறார்.

ஸ்ரீ:

உபய வேதாந்த ஐககண்ட்யம்

(12-வது ஸம்புடம் 8-வது ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஶாஸ்த்ராரம்பத்தில் 'ஆநந்தோ ப்ரஹ்ம' என்றபடி ஆனந்தமான ப்ரஹ்மத்தின் இன்ப விசாரத்தை விரும்பிச் செய்வதென்றும் ஆனந்த மீமாம்ஸையைத் தொடங்கி தைத்திரீய ஜந்மாதி லக்ஷண வாக்யத்திற்கு முடிவு நிலமான 'ஆநந்தாத்த்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே' என்கிற வாக்யத்தால் காரண ப்ரஹ்மத்தின் ஆனந்தமயத்வத்தைக் காட்டி ஸமந்வயாதிகரணத்தில் அந்த ப்ரஹ்மமும் அதன் உபாஸந ப்ராப்திகளும், நிரதிசய இன்பமயமான ஸ்வயம் புருஷார்த்தமென்பதையும் காட்டி ஆநந்தமயாதிகரணத்தில் எண்பெருக்கென்றுசொல்லப் படும், 100–100, ஆகப் பெருக்கிய ப்ரஜாபதி என்னும் ப்ரஹ்ம தேவருடைய ஆநந்தத்திற்கு 100 பங்குப் பெரியதாகக் காட்டி வாக்குக்கும் மனத்துக்கு மெட்டக்கூடாத 'அந்நல' மென்றே சொல்லக்கூடிய ப்ரஹ்மானந்தத்தையும், அதை அவனிடத்தில் அவிச்சிந்நமான நிஷ்டையால் அடைவதையும் காட்டுவதை முதல் பாசுரத்தில் விளக்கியுள்ளதை முன்பே விவரித்துள்ளோம். 'உயர்வற வுயர்நலம்' என்றது 'எண் பெருக்கந் நலம்' எண்ணிக்கையின் ப்ரவாஹத்திற்கு உள்ளடங்காத ஸர்வாதீதமான நலமென்பதை முதற்பாசுரத்தில் போல இங்கே கடைப் பாசுரத்திலும் குறிப்பது ரஸிக்கத்தக்கது. ஸூத்ரகாரரும் ஶாஸ்த்ர முடிவில் 'போகமாத்ரஸாம்யலிங்காச்ச' என்று போகமென்னும் ஆனந்தத்தில் ப்ரஹ்மஸாம்யத்தைக் கூறி, முழுவது மென்ற பொருளையுமுடைய மாத்ர ஶப்தத்தால் 100–100—ஆகப் பெருக்கப் பட்டு எல்லாத்திற்கும் மேற்பட்டதாகக் காட்டப்பட்ட ப்ரஹ்மானந்தம் முழுவதும், 'ஸோ(அ)ஶ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ' என்று ஆனந்த மீமாம்ஸையில் காட்டியபடி முக்தருக்கும் ஸமமென்பதை விளக்கினர். அதே க்ரமத்தில் ஆழ்வாரும் ப்ரஹ்ம ஸூத்ர விளக்கமான இவ்விரண்டு திருவாய்மொழிகளில், 'தேவ ஶப்தம்' உதாஹரித்தத்தினாலே நிரதிஶய ஶப்தமாக ஆநந்தரூபமாயிருந்த ஆநந்தஸ்வரூபம் வேதைக வேத்யாநந்தகுணவிஶிஷ்டமாய்' என்று திருவாருயிர முரைத்த பொருளுடைய 'உயர்வறவுயர் நலமுடையவன்' என்ற உயர்வறவுயர்ச் சொல்லுடனாரம்பித்து அதே பொருளை 'எண் பெருக்கந்நல' மென்பதால் காட்டி, இவ்வளவு நலமும் ஒண் பொருளான ஜீவருக்கு அளித்து அவர்களை ஈறில ஒண்பொருளாய் ப்ருஹ்மணம் செய்து தன்னோடு ஜ்ஞாநாநந்தங்களில் பூர்ண ஸமராய்ச் செய்யும் பரமோதார வண்புகழையுடைய நாரணன் என்று பாடுகிறார். 'ஸர்வ காமாநஶ்நுதே' 'எண் பெருக்கு' என்கிற பதத்திற்கு, 100-என்பதை எண்ணாகக்கொண்டு அதை மேலே மேலே நூற்றுக்கணக்காய் ச்ருதியில் பெருக்கி இருப்பதும் பொருளாகும். அப்படிப் பெருக்கி இவ்வளவு பெருக்கியும் முடிவில் ஓர் பெருக்கிய பெரும் எண்ணைக் காட்டினதால் அந்த ஆனந்தம் கணக்கிலடங்கிய ஓர் பெருக்கிய எண் என்று நினையாதேயுங்கோள் என்பதும் 'எண் பெருக்கு' என்பதற்குப் பொருளென்று. 'எண்—ஸங்க்யா, பெருக்கு-ப்ரவாஹ:, நலம்-ஆநந்தமிதி யாவத்' என்று ஒன்பதினாயிரம் காட்டிற்று. ஆனந்த வல்லியில் சொல்லுகிற கணக்கிலே எண்ணுக்கு 'அவ்வருகே பெருக்கி இருப்பதால்' என்று பன்னீராயிர முரைத்த பொருள். 'எண் பெருக்கு' என்பதை 'ஒண் பொருள்' என்ற ஜீவர்களுக்கு விஶேஷணமாக்கி ஜீவாநந்த்யத்தைச் சொல்லுகிற தென்று ஈடு. அது 'அஸங்க்யேயராய், ஜ்ஞாநாநந்த ஸ்வபாவராய் இருந்த ஸர்வாத்மாக்களும்' என்ற திருவருயிரத்தையொத்தது. எல்லாப் பொருள்களும் இங்கு சேர்வதே. 'அந்நல' மென்பது இன்னதென்று பரிச்சேதிக்கவும் பேசவுமொண்ணாதபடி 'யதோ வாச:' என்று வர்ணிக்கப்பட்ட எல்லையற்ற ப்ரஹ்மாநந்தத்தை இங்கே முடிவில்கூறுகிறது.

நூறு என்ற எண்ணல் மேல்மேல் பெருக்கி எல்லாவற்றிலும் பெரிதென்று காட்டினாலும் அது அடியோடு அளவற்றது, சொல்லுக்கும் நினைப்பிற்கும் அடங்காதென்பதை ஆனந்த மீமாம்ஸையில்காட்டியிருக்கிற க்ரமத்திலேயே 'எண் பெருக்க'ன்று கூறி, அந்நல மென்று 'யதோ வாசோ' மந்த்ரப் பொருளை இங்கே வர்ணிக்கும் ரஸம் ரஸிக்கத்தக்கது. 'அந்நலத்து' என்பதற்கு சாந்தோக்யத்தில் ப்ரஜாபதி வித்யையில் குணாஷ்டகத்தோடு கூடிய ஆவிர்பூத முக்த ஜீவ ஸ்வரூபத்தைச் சொல்லும், 'ய ஆத்மா அபஹத பாப்மா' என்று வர்ணித்ததைக்குறிப்பாகக்காட்டி அதை ஒண் பொருளென்று சொல்லப்படும் முக்திபெறும்ஜீவருக்கு விசேஷணமாக ஒன்பதினாயிரத்தில் காட்டப்பட்டது. இந்த பல தசையில் எண் குணமுள்ள ப்ராஹ்மரூபமென்று 4-ம் பாதத்தின் 3-மதிகரணத்தில் முக்த ஜீவருக்கு ஆவிர்பவிப்பதாகக் கூறியதை அப்பொருள் ஸூசிக்கும். 'அஸ்நுதே ஸர்வாந் காமாந் ஸஹ ப்ரஹ்மணா விபஸ்சிதா' என்று அபரிச்சிந்ந ஆனந்தமயனான நாராயணனிடத்தில் நிஷ்டையைப் பெருக்கி, அயந ஶப்தம் காட்டுகிறபடி முக்தர்களுக்குப் பரமகதியாகிய அவனிடம் நித்யமும் பிரியாமல் லயித்திருப்பதால் ஜீவனுக்கும் அந்நலமென்று சொல்லப்படும் ப்ராஹ்மானந்தத்தின் யோகம். அதாவது-'ஆநந்தீ பவதி' கிடைக்கிறதென்று ஆனந்தமயாதிகரணத்தின் முடிவில் விளக்கியது இங்கே ஶாஸ்த்ர முடிவில் பலதசையில் அவன் அநுக்ரஹத்தால் ஸித்திப்பதை இப்பாசுரம் விளக்குவதாகப் பொருள் கொள்வதும் ரஸமே. ஸூத்ரகாரரும் ஆனந்தமயாதிகரணத்தில் ப்ராஹ்மத்திற்குள் நிஷ்டையுள்ள காலத்தில் ஜீவனுக்கும் ப்ரஹ்மாநந்த மெனும் அந்நலத்தின் லாபம். முக்தி தசையில் நித்யமாய் ப்ரஹ்மஸமமாய்க் கிடைப்பதை போகமாத்ர ஸூத்ரத்தில் காட்டியதை ஆழ்வார் இங்கே விளக்குகிறார். 'அந்நலத்து' என்றதற்கு 'தேஜோமயம்' என்று க்ரமேண, 'ஶ்ரோத்ரியஸ்ய சாகாமஹதஸ்ய' என்று சொன்ன நிரவதிக ப்ரஹ்மாநந்த ஸுகானந்தத்தை யுடைத்தான என்றும் அர்த்தமாம்.' என்று 18- ஆயிரம் பணித்தது பன்னீராயிரத்தின் உரையை யொத்தது. 'எண் பெருக்கந் நலத்தொண் பொருள்' இத்யாதிநா ஜீவஸ்வரூபாதிவாசகா, ப்ரஹ்ம ப்ரபோதந பர, ஸந்தோஷ ரூபாவமந்யமானா ஸ்வரூபாஸம் வதந்ஸ்வ. ஏதி வாசகோ' 'ஏறிலவண்புகழ்' இத்யநேந நாராயண ஶப்தாயோஃ உக்தஃ' இதி கெளிக வதந்தி' என்று ஒன்பதினாயிரம். இருவர் பரமாயும் யோஜனை கொள்வதால் நாராயணனுக்குள்ள எண் பெருக்கந்நலமும் ஈரில ஒண் பொருளான விவக்ஷித மென்னும் ஸாமாந்யமு மிங்கே ஶாரீரக ஶாஸ்த்ர விளக்கத்தின் முடிவில் திருவஷ்டாக்ஷர மந்த்ராதி நிஷ்டையை யுடைய, ஸர்வவிஶிஷ்ட நாராயணபராயணரான, அப்ராக்ருத காலம்பநருக்கு, ஹார்த்தனென்னும் நாராயணனுடைய அநுக்ரஹத்தால் ப்ரஹ்ம நாடிவழியாக ஶரீரத்யாகம் கிடைத்து அவனால் 'அமாநவ: ஸ ஏநாந் ப்ரஹ்ம கமயதி' என்ற ஸூத்ரப்படி அர்ச்சிராதி கணங்களால் விஷ்ணு பரமபதத்திற்கு நயகம் செய்யப்பட்டு அவனிடத்தில் ஸம்பத்தியால் தன்னுடைய ஸ்வாபாவிகமாயினும் இது வரையிலும் கர்ம திரோஹிதமான ஜ்ஞாநாநந்தாதி ஸ்வரூபாவிர்பாவ ரூபாவிர்பாவம் பெற்று அவனோடு உயிர் வேறின்றி அவிபாகத்தைப் பெற்று சுத்த சைதந்யரூபத்தோடு குணாஷ்டக யுக்தமான ப்ரஹ்மரூபமான ப்ராஹ்மரூபத்தையும் பெற்று, ஜ்ஞாநாநந்தம் முழுவதிலும் 'ஸோஶ்நுதே ஸர்வாந்' என்கிறபடி அவனருளால் ஸாம்யம் பெற்று முக்திப் பேரின்ப மநுபவிப்பதை இங்கே விளக்குகிறபடியால், அவனுக்கு இந்த நிரதிசய ஜ்ஞாநாநந்தங்களிருப்பதைக் கூறி, அது முழுவதும் இவனுக்கும் ஸமமாகக் கிடைப்பதை வர்ணித்த ஶாரீரகஶாஸ்த்ரக்ரமத்திலேயே இருவருக்கும்பொருந்தும்படி உரைப்பதாகக்கொள்வது ரஸமே. ப்ரஹ்மஶப்தத்திற்கு,'ப்ரஹ்மயதி வர்த்தயதி ஸர்வதி, ப்ருஹயதி-ஸ்வாநு வர்த்தயதி' என்று ஸ்ரீமத்வ பாஷ்ய டீகாதிகளிலும் உரைக்கப்பட்டது. அது ச்ருதியே நேரில் காட்டிய நிருக்தி. 'வர்த்தநஃ வர்த்தயிதா வர்ண்யஃ' என்பதும், 'ஆநந்தோ ப்ரஹ்

நொநந்' என்பதும் ஜ்ஞாநாநந்தங்களைத் தமக்கு ஸமமாக வழங்கும் பரமௌதார்யவண் புகழை இங்கே 'வண்புகழ்' என்று காட்டுகிறார். 'ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி தஸ்ய நாம மஹத்யஸ:' என்று ச்வேதாச்வதரத்தில் கூறியதும், சாந்தோக்யம் முடிவில் 'ப்ரஜாபதே: ஸபாம் வேச்ம ப்ரபத்யே, யசோஹம் பவாமி ப்ராஹ்மணாநாம், யசோ ராஜ்ஞாம், யசோ விசாம், யசோஹமநுப்ராபத்ஸி' என்று பகவானை யசஸ் என்ற திருநாமத்தாலேயே, ப்ரஜாபதி என்னும் பகவானுடைய திருமாமணி மண்டபமென்னும் ஸபையை ப்ரவேசிக்கும் காலத்தில் பாடியுள்ளதையும் ஆழ்வாரிங்கே 'வண் புகழ்' என்பதால் ரஸமாக நினைவூட்டுகிறார். 'வண் புகழ்' என்பதே நாராயணனுக்குத் திருநாமமாகும். 'மஹத்யஸ:' என்பதற்கு 'வண்புகழ்' என்று தமிழ். அதுவே அவன் திருநாமமாகும். மேலும் அவருடைய ஸகல விதமான புகழ்களையும் மஹிமைகளையும் அநேக ப்ரமாணங்கள் காட்டியபடிக்கும் இந்த நாராயண ஶப்தமே உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளக்குகிறதென்பதை எல்லா ரஹஸ்ய க்ரந்தங்களும் ஸ்ரீமத்வ பாஷ்யாதிகளும் ஸ்ரீஶங்கர பாஷ்யாதிகளும் பூர்ணமாய் விளக்கியுள்ளன. 'ஜந்மாத்யஸ்ய யத:' என்று ஸூத்ரகாரர், விச்வ ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாராதிகளும், முக்தருள்பட எல்லா சேதனர்களையும் அந்தர்யாமியாய் இருந்து நியமனமும், ஸர்வ வித ரக்ஷணங்களும் செய்வதை தெளிவாக ஶாஸ்த்ரத்தின் முடிவதிகாணத்தில் காட்டியதை இந்த நாராயண ஶப்தத்தை இங்கே முடிவில் ப்ரயோகிப்பதால் ஆழ்வார் விளக்குகிறார். ஜந்மாதி லக்ஷணம் நாராயணன் ஒருவருக்கே உளது. பரமஸாம்யம் பெறும் முக்தர்களுக்கு அது மட்டும் கிடையாது என்பதை நாராயண ஶப்தம் தெளிவாகக் காட்டுகிறது. 'ஸாம்ராஜ்யம் பரமாகதிம் ... நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா ந ஈசாந:' என்று கேட்டதில் அவனுடைய ஈசித்ருத்வம் ஸ்வாபாவிகம், நிரதிசயம் என்றதால் முக்தருள்பட எல்லாசேதனருக்கும் வ்யாவ்ருத்தி காட்டப்பட்டது. மனுஸ்ம்ருதி ஆரம்பத்தில், நாராயணன் விச்வ ஶரீரனென்றும் அவன் தான் ஸ்ருஷ்டித்தானென்றும் காட்டியபடி ஜந்மாதி லக்ஷணம் அவனொருவனுக்குத் தான் கூடும். நாரமென்னும் நர ஸமூஹத்திற்கு அவனே அயன மென்னும் ஆதாரம். க்ஷேமப்ராபகமான உபாயம், முக்தி தசையிலும் ஆதாரமும் ஆனந்த ப்ராபகனுமான அயனம், அயர்வறு மமரர்களதிபதி என்கிற பொருளும் மயர்வற மதிநலமருளுபவனென்கிற பொருளும், உயர்வற வுயர்நலமுடையவனென்கிற பொருளும் இப்பதத்திலடங்கியுள்ளது. 'ஏகோ ஹவை நாராயண ஆஸீத்' என்கிற மஹோபநிஷத்தால், ப்ரளயத்திலும் மற்றெல்லாவற்றையும் உள்ளடக்கிக்கொண்டு இருப்பதையுமிப்பதம் ஸூசிக்கும். 'மாதா பிதா ப்ராதா நிவாஸ: ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:' என்றும், 'திவ்யோ தேவ ஏகோ நாராயண:' என்றும் ஸுபாலோபநிஷத்தையும் நினைவூட்டி, ஸகல ஜீவர்களுக்கும் மாதாவும் பிதாவுமாய் இருக்கிறவர் தனக்குள்ள குடல்துவக்காலும், நிரவதிகமான தயையினாலும் ஸர்வ ப்ராணிகளையும் வீடு சேர்க்கக் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாலும், எண் பெருக்கான அனந்த ஜீவர்களையும் அந்நலமுடைய ஒண் பொருளாகச் செய்து, அவ்வொண்ணும் ஈறிலராகச் செய்து தன்னோடு பிரியாக் கலப்பைத்தந்து தன்னிடமே நித்ய வாஸம் செய்யும்படி பராசரர் ஸகல சேதனர்களுடைய மோக்ஷத்தை தம் க்ரந்த முடிவில் ஆஶாஸநம் செய்வது போல் இங்கும் அநந்த ஜீவர்களுக்கும் தங்களுக்கு உரிய வீடாகிய அவன் வீட்டில் சேர்ந்து அவனோடு பிரியாமல் அவனுக்குள்ளே லயித்து இன்பமாக தாரண போஷணங்கள் செய்யப்படும் ஸர்வமுக்தி மங்களத்தை இங்கே ஶாரீரக விளக்கமுடிவில் வ்யஞ்ஜநம் செய்கிறார். 'திண்கழல்' என்பது அச்யுதனுடைய அச்யுதமான ச்யவனரஹிதமான தன்மையைக்காட்டும். 'ஏதேவை நிரயாஸ்தாத ஸ்தாநஸ்ய பரமாத்மந: । நாவாப்நுவந்தி மஹாத்மாந: ஸம்ஸிதிம் பரமாம் கதா:' 'ஸர்வே ... யேநாக்ஷரேண: ப்ரதிபந்ந ... மோக்ஷ ...' என்றபடி புநராவர்த்தநமில்லாத சாச்வதப் பேற்றைக் கூறும் ஶாரீரகமுடிவு ஸூத்ரமான அநாவ்ருத்திஸூத்ரத்தை ஸூசிக்கிறார்.

(தொடரும்)

ஸ்ரீபாகவதத்தில் சில தர்மங்கள்

ஸாபமும் அநுக்ரஹமே

புராணங்களில் பல விடங்களில் அல்பமான குற்றமாயிருப்பினும் பெரிய குற்றமாயிருப்பினும் மஹர்ஷிகள் சாபமிடுவதாகக் காண்கிறோம். பரம காருணிகர்களான மஹர்ஷிகள், சிலரைக்கண்டு ஏன் இப்படிசபிக்க வேண்டும்? இம்மஹர்ஷிகளோ ஆத்மாராமர்கள். இவர்களுக்கு உலகத்தில் பெறவேண்டிய லாபமொன்றுமில்லை. ஆசையற்றவர்கள். அப்படியிருக்க இவர்களுக்குக் கோபம் வரக் காரணமேயில்லை. 'காமாத் க்ரோதோபிஜாயதே' என்று பகவத் கீதை. ஒருவன் ஒரு பொருளில் ஆசைவைத்தால் அதற்கு விரோதம் செய்தவனிடம் அவனுக்குக்கோபமுண்டாகும் என்பது அதன் பொருள். எதிலும் ஆசையைத் துறந்த இவர்களுக்கு மனக்கலக்கமுண்டாகக் காரணமில்லை. இதற்கு ஸமாதானம்—இது கோபத்தாலுண்டாயிருந்தால் மனக்கலக்கத்திற்குக் காரணத்தை யாராயவேண்டும். இது அநுக்ரஹத்தின் கார்யம். நிக்ரஹ கார்யமல்ல. இவர்கள் பகவானிடமளவிறந்த அன்பு கொண்டவர்கள். அதனால் அவன் விபூதியான ஜீவராசிகளிடமும் அத்தகைய அன்பு கொண்டவர்கள். அதனால் அந்த ஜீவராசிகள் எப்படியாவது மேன்மேலும் உயர் நிலையையடையவேண்டுமென்ற கருத்துடையவர்கள். ஏதோ புண்ய வசத்தால் நல்ல நிலைமைக்கு வந்த ஒருவன் அல்பமான பாபத்தின் காரணமாக மறுபடி ஹீனஸ்திதியையடைவதைமஹான்கள்ஸஹிக்க மாட்டார்கள். உடனே அந்த தோஷத்தை அவனிடமிருந்து மாற்றி மறுபடி ஸத்வகுணம் தலையெடுத்து அவன் எவ்வாறு நல்ல நிலைமையையடைவானோ அவ்வாறு செய்ய வெண்ணியே சாபம் கொடுக்கிறார்கள். இத்தகைய சாபத்தின்மூலம் அவனை நல்லஸ்திதியை அடையவொட்டாமல் தடுத்த துர்குணத்தை மாற்றுவதற்கு பல துன்பங்களை அநுபவிக்கும்படி செய்து அப்போதும் இத்துர்குணத்தின் கார்யமாக நாம் மஹா லாபங்களை யிழந்து இக்கஷ்டங்களை அனுபவிக்கிறோம் என்ற எண்ணத்தையுமுண்டாக்கி பரிதவிக்கும்படி செய்து அவர்களை சுத்தமாக்கி நன்மை பெறும்படி செய்கிறார்கள். ஆகையால் இது முற்றிலும் அநுக்ரஹத்தின் கார்யமாக ஏற்படுவதே யாகும். ராவணன் கும்பகர்ணன் முதலானவர்களின் சரித்திரத்தை யாராய்ந்தாலும் இவ்விஷயம் நன்கு வெளியாகும்.

ஒரு ஸமயம் விசேஷ புண்யவசத்தால் ஸ்ரீ வைகுண்டலோகத்தில் பெருமாளுக்கு த்வார பாலக கைங்கர்யம் செய்யும்படியான பாக்யம் பெற்ற ஜய விஜயர்கள் அக்கைங்கர்யத்தில் அமர்ந்திருந்தார்கள். அது ஸமயம் ப்ரஹ்மாவின் மானஸ புத்திரர்களான ஸநகர், ஸநந்தனர்முதலானோர் சிறு குழந்தை வடிவத்துடன் திகம்பரர்களாய் (வஸ்த்ர ஹீனர்களாய்) பெருமாளை ஸேவிக்க வந்தார்கள். இவ்வாறு இவர்கள் அடிக்கடி வருவது வழக்கம். அன்றைய தினம் அவர்களை ஜய விஜயர்கள் உள்ளே போகக்கூடாதென்று தடுத்துவிட்டார்கள். இவர்கள் ஒருநாளும் இவ்வாறு செய்தவர்களல்ல. மிகுந்த புண்ய விசேஷத்தால் இவர்கள் இக்கைங்கர்யம் கிடைக்கப் பெற்றவர்கள். இருந்தாலும் ப்ராரப்த கர்மத்தின் பலனாக இப்படி செய்தார்கள். அதிகாரச்செருக்கு இப்படி செய்யும்படி தூண்டிவிட்டது. உடனே மஹர்ஷிகள் 'ஐயோ! இவர்கள் அதிகாரச் செருக்கின் காரணமாக இப்படிச் செய்யத் துணிந்தார்கள். இவர்களை இப்படியே விட்டால் இவர்கள் மேன்மேலும் கெட்டுவிடுவார்கள்.' என்று எண்ணினார்கள். பாபத்திற்கு மூன்று சக்திகள் உண்டு. (1) கெட்ட பலனை அநுபவிக்கும்படி செய்வது. (2) மேற்கொண்டு இதற்கு ஸமமான மற்றொரு பாபத்தைச் செய்யும்படியான ருசியை விளைவித்தல். (3) ஸத்துக்களின் கோஷ்டிக்கு அநர்ஹனாக்குதல். இப்படியே புண்யத்திற்கும் கண்டு கொள்

ளவும். ஆகவே இவர்களுக்கு ஸஜாதீய கர்மாவில் ருசியை வளர்க்காமல் இருப்பதற்கு இவர்கள் இந்த அதிகாரத்தில் இருக்கத் தக்கவர்களல்ல’ என்று நினைத்து அப்பதவி இவர்களுக்கு நீங்கும்படியாக சாபம் கொடுத்தார்கள். பின் அவர்கள் பெருமாளைச் சரணமடைந்து வேண்டிக்கொள்ள பெருமாள் தனக்கு அந்த சாபத்தை மாற்ற சக்தியில்லை என்று சொல்லிவிட்டு ‘எனக்குஅநுகூலர்களாயிருந்து என்னிடம் பக்தியுடன் அநேக ஜன்மாக்களைக் கழித்து இப்பாபத்தைப் போக்கி என்னை மறுபடி அடையலாம். அல்லது விரோதிகளாயிருந்து மூன்று ஜன்மாக்களாலாவது போக்கலாம். அநுகூல பாவனையுடன் என்னை நினைப்பதைவிட— விரோத பாவனையுடன் நினைத்தால் அந்த நினைவு மிக தீவ்ரமாயிருக்கும்’ என்று நியமித்தார். அவர்களும் விரோதிகளாக இருந்தாவது மூன்று ஜன்மாக்களில் (சீக்கிரத்தில்) திரும்ப தங்கள் ஸ்தானத்தைப் பெறவேண்டுமென்றெண்ணி மூன்று ஜன்மாக்களில் முறையே ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு, ராவண கும்பகர்ண, சிசுபால தந்தவக்த்ரர்களாயிருந்து விரோதி புத்தியுடனேயே பகவத்த்யானத்தை வளர்த்து பாபத்தைப்போக்கி மறுபடியும் தங்கள் பதவியைப் பெற்றார்கள் என்று புராணங்களின் வரலாறு. இவ்வாறு மஹரிஷிகளின் சாபம் அவர்களை அநுக்ரஹிப்பதற்காக ஏற்பட்டதேயல்லது அவர்களை நிக்ரஹிப்பதற்கல்ல என்பது நன்கு புலனாகிறது.

𑌦𑌾𑌰𑌿𑌦𑍍𑌰𑍍𑌯𑌂 𑌪𑌰𑌮𑌾𑌂𑌜𑌨𑌮𑍍

தரித்ரத் தன்மை கண்ணுக்கு அருமருந்தாகும்—(ஸ்ரீபாகவதம் 10–வது ஸ்கந்தம் 10–வது அத்யாயம்)ஸ்ரீ க்ருஷ்ணன் தாயான யசோதையால் உரலில் கட்டுண்டபடியே கோகுலத்தின் வீதியின் கோடியில் வெகு காலமாக இரட்டை மரங்களாகச் சேர்ந்திருக்கும் இரண்டு மருதமரங்களைக் கண்டார். நாரதரின் சாபத்தால் அவர்கள் மருத மரங்களாயிருப்பதை நினைத்தார். அவர்களைச் சாபத்திலிருந்து விடுவிக்க வேண்டுமென இரக்கம் கொண்டார். உடனே அவர் அழுத கண்ணுடனேயே உரலையுமிழுத்துக்கொண்டு அம்மரங்களின் நடுவே சென்றார். உரல் நேராக அம்மருதமரங்களிடையே செல்லமாட்டாமல் குறுக்காகத் திரும்பியது. ஸ்ரீ க்ருஷ்ணன் அப்போது அவ்வுரலை மிக்கபலத்துடன் இழுக்க அம்மரங்களிரண்டும் கீழே சாய்ந்து விழுந்தன. உடனே அம்மரங்களிலிருந்து இரு கந்தர்வர்கள் வெளிவந்து ஸ்ரீ க்ருஷ்ணனை ஸேவித்துப் போனார்கள் என்று கதாக்ரமம். நல்ல குலத்தில் பிறப்பு, நல்ல படிப்பு, நல்லவர்களுடன் சேர்க்கை நல்ல உத்யோகம், நல்ல ஐச்வர்யம் இவையாவும் ஒருவன் க்ஷேமத்தைப் பெறுவதற்கு அநுகூலமானவை. அவையே கர்வத்திற்கு ஹேதுவாகும் போது அநர்த்தத்தை விளைவிக்கும். குபேரனுக்குப் பிள்ளைகளாய், ருத்ரனிடம் உத்யோகம் பெற்று, நல்ல படிப்பும் ஐச்வர்யமும் பெற்ற நளகூபரன் மணிக்ரீவன் என்ற இரு கந்தர்வர்களும் குலச் செருக்கு. பணச் செருக்கு, உத்யோகச் செருக்கு இவைகளால் மதித்தும் மத்யபாநம் செய்தும் கைலாஸ மலைச் சரிவில் பூஞ்சோலைகளின் நடுவில் மந்தாகினி நதியில் வஸ்த்ர ஹீனர்களாய் ஸ்த்ரீகளுடன் ஜலக்ரீடை செய்யும்போது தற்செயலாக நாரதர் அங்கு வந்தார். அவரைக் கண்டதும் அந்த ஸ்திரீகள் நாணத்தால் கடுக வஸ்திரத்தை அணிந்து கொண்டார்கள். நளகூபரன் மணிக்ரீவன் என்ற இவ்விருவர் மட்டும் மதித்துப் போய் நாரதரின் வரவையும் உணராமல் வஸ்திரஹீனர்களாகவே இருந்தார்கள். நாரதர் அவர்களைக் கண்டு இரக்கங்கொண்டு இம்மாதிரி சொல்லுகிறார்—மனிதனுக்கு வித்யாமதம், குலமதம் முதலிய மதங்களைவிட ஐச்வர்ய மதமே புத்தியைக் கெடுத்து ரஜோகுணத்தை யுண்டாக்கி காம க்ரோதங்களை வ்ருத்தி செய்யும். ஐச்வர்யம் ஒன்று இருந்தால் ஸ்திரீ ஸங்கம், த்யூதம், மதுபானம் முதலிய வ்யஸனங்கள் தானே சேர்ந்துவிடும். பணத்திமிரால் தேஹத்தை சாச்வதமாக நினைத்து இந்திரியங்களை யடக்காமல் தயையில்லாமல் ஜந்துக்களை ஹிம்ஸிப்பார்கள். தேவன் ப்ராஹ்மணன் க்ஷத்ரியன் வைச்யன் என்று பெயர் பெற்ற இந்த சரீரம் முடிவில் உயிர் நீத்த பின் கொளுத்தப்பட்டால் சாம்பலாகவும் நாய் முதலியவைகளால் தின்னப்பட்டால் விஷ்டையாயும் (மலமாயும்) வெறு

மனே கிடந்தால் புழுக்களாயும் மாறுவதைக் கண்ணுற்ற போது இதற்கு உண்மையில் எப்பெயர் கொடுப்பது? இதற்காக வல்லவோ கடு நரகம் பயக்கின்ற ஜந்து த்ரோஹம் செய்வது? உயிருடனிருக்கும் போதுதான் இந்த ஶரீரம் தன்னுடையதோ? பெற்றோர்கள் தங்களுக்கான தென்றும் இவனை அடிமையாக்கிக்கொண்டவன் தன்னுடையதென்றும், பார்யை தன்னுடையதென்றும், நரி முதலிய துஷ்டமிருகம் தன்னுடையதென்றும் நினைக்கின்றனர். இவ்வாறு யாருடையது என்று சொல்ல வியலாத நச்வரமான இந்த ஶரீரத்திற்காகவல்லவோ ப்ராணி த்ரோஹம் செய்யப்படுகின்றது.

ஐச்வர்யமதம் ஏறி கண்தெரியாமல் தன்னைப் போல பிறரையும் காணமாட்டாமல் இருக்குமவன் கண்ணுக்குத்தக்க அஞ்ஜனம் (மருந்து) தாரித்ர்யமே. தரித்ரனே தன்னைப்போல் பிறரைக்காண வியலுகிறான். தான் கஷ்டப்பட்டால் பிறரும் இப்படியல்லவோ கஷ்டப்படுவார்கள் என்று நினைக்கத் தலைப்படுகிறான். காலில் முள் தைத்து கஷ்டப்பட்டவன்தான் பிறருக்குஇக்கஷ்டமுண்டாகலாகாதென நினைக்கக்கூடும். முள் தைக்காதவனுக்கு இக்கஷ்டம் தெரியாது. தரித்ரனுடன்தான் அஹம்பாவத்தை விடுகிறான். குலமதம் வித்யாமதம் முதலிய மதங்கள் நீங்கி விடுகின்றன. தன் முயற்சி யில்லாமலேயே சரீரம் உலர்ந்து விடுகிறது. இதுவே அவனுக்குத் தவம். பசியால் தேஹம் வாடும்போது இந்திரியங்கள் தன்கடையாகவே வாடிவிடும். ஹிம்ஸையில் ருசியுண்டாகாது. பணக்காரன் ஸாதுக்களைக் காண விரும்பான். ஏழைகளுக்கு ஸாதுக்களின் சேர்க்கை எளிது. அவர்களின் சேர்க்கையால் சிற்றின்பங்களின் அவா முறிகின்றது. பின் சீக்கிரமே சுத்தமாகிறான். தன்னைப் போல் பிறர்களை நினைத்தும் பகவச் சரணாவிந்த மொன்றையே அபேக்ஷிக்க வேண்டியவர்களாயுமிருப்பவர்களுக்கு பல துர்குணங்களுக்கு இருப்பிடமாயும் ஸாதுக்கள் வெறுக்கக்கூடியதுமான பணம் எதற்கு? ஆகவே பணத்திமிர் ஏறியும், மது பானம் செய்தும் ஸ்த்ரீகளுக்கு விளையாட்டுக் கருவியாயு மிருக்குமிவர்களின் ஐச்வர்ய மதத்தை நீக்கிவிடவேண்டும். லோகபாலனான குபேரனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்தும் ருத்திரனுக்கு வேலைக்காரர்களாக அமைந்திருந்தும் தாங்கள் ஆடையணியாமலிருப்பதை உணரவில்லை. ஆகவே ஆடை அணியவேண்டிய உணர்ச்சியில்லாதமரங்களாக ஆகக்கடவர்கள்.’ என்று நாரதர் சபித்து மேற்கொண்டும் அநுக்ரஹத்துடன் ‘ஸ்ரீ க்ருஷ்ணனுடைய சேர்க்கையால் ஆயிரம் வருஷங்களுக்குப்பின் சுத்தர்களாகக்கடவர்கள்’ என்று சாபத்திற்கு முடிவையுமேற்படுத்தி அக்காலத்திலும் என்னுடைய அநுக்ரஹத்தால் இவர்களுக்கு பூர்வ ஜன்ம ஸ்மரணம் மறையாமலிருக்கவேண்டுமென்றும் சாபமளித்தார்.

பின் ஸ்ரீ க்ருஷ்ணன் நாரதரின் வாக்யத்தை உண்மையாக்கி இவர்களை அநுக்ரஹித்தார். மரங்கள் முறிந்து விழுந்ததும் அந்த கந்தர்வர்கள் இருவரும் அவற்றிலிருந்து வெளிக்கிளம்பி திவ்ய ரூபத்துடன், பகவானைத் துதித்து விடைபெற்றுச் சென்றார்கள். இவர்களுக்குநாரதமஹர்ஷியின்சாபத்தாலுண்டான தாரித்ரியமானது இவர்கள் இழந்த கண் பார்வையைத் திரும்பவும் உண்டாக்கிக்கொடுத்து உபசரித்தபடியால் ஐச்வர்ய மதத்தால் கண் இழந்தவனுக்கு தாரித்ரியமே சிறந்த (அஞ்சன) மையாகும் என்று நினைத்து ‘அஸதஃ ஶ்ரீமதாந்தஸ்ய தாரித்ர்யம் பரமாஞ்ஜனம்’ என்று சுகப்ரஹ்மமருளிச்செய்தார். ஆகவேமஹான்களின் சாபம் முற்றிலும் அநுக்ரஹமே யாகும்.

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

5-6-54 இரவு 9 மணிக்கு கடயத்தைவிட்டுப் புறப்பட்டு 10 மைலில் உள்ள தென் காசிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்கொண்டு வரவேற்று திருநெல்வேலி ரோட் தெருவில் எழுந்தருளப் பண்ணினார்கள். அங்கிருந்து 7-6-54 பகல் 2 மணிக்கு புறப்பட்டு 12 மைல் தூரமுள்ள கடயநல்லூர் கருமாணிக்கப் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் யதாசக்தி ஆராதித்தார்கள். அங்கிருந்து 8-6-54 பகல் 3 மணிக்குப் புறப்பட்டு 7 மைல் தூரமுள்ள சிந்தாமணிக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகளால் யதாசக்தி ஆராதிக்கப்பட்டு அங்கிருந்து 9-6-54 பகல் 3 மணிக்குப் புறப்பட்டு 12 மைலில் உள்ள சிவகிரி சத்திரத்திற்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகளும் யதாசக்தி ஆராதித்தார்கள். அங்கிருந்து 10-6-54 பகல் 3 மணிக்குப் புறப்பட்டு 12 மைல்தூரமுள்ள ராஜப்பாளையம்அக்ரஹாரத்திற்கு எழுந்தருளினார். அவ்வூரை விட்டு 11-6-54 பகல் 3 மணிக்குப் புறப்படும் பொழுது அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி வீதிகளின் வழியாக ஊர்வலமாக எழுந்தருளி சுமார் 7 மைலில் உள்ள ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் ஆழ்வார் மண்டபத்தின் ஸமீபம் ஸ்ரீமதழகியசிங்கர் எழுந்தருளும்போது அவ்வூர் ஆஸ்திகர்களும், வைதிகர்களும் பூர்ணகும்பத்துடன் ஸ்ரீ அழகியசிங்கரை வரவேற்று வெகு அழகாக ஜோடித்து வைத்திருந்த தந்தப் பல்லக்கில் ஸ்ரீ அழகியசிங்கரை எழுந்தருளப்பண்ணி, சத்ர சாமர வாத்யம் முதலிய ஸகல பிருதுகளுடனும், அனுயாத்ரையாக வைதிகர்கள் வேதபாராயணம் பண்ணிக்கொண்டுவர ஸ்ரீவில்லிபுத்தூரில் எல்லா வீதிகளிலும் வெகு கோலாஹலத்துடன் ஊர் வலமாக எழுந்தருளி ஸுமார் மாலை 7 மணிக்கு ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஸ்ரீ மாலோலன் ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளியிருந்தார். ஸ்ரீ அழகியசிங்கர் வானமாமலை மடத்தில் எழுந்தருளியிருந்தார். 12-6-54 காலை 9 மணிக்கு அபிகமநாராதனம் முடிந்ததும் அவ்வூர் கோயில் அதிகாரிகளின் ப்ரார்த்தனையின் பேரில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸகல பிருதுகளுடன் ஸ்ரீ ஆண்டாள் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. த்வஜஸ்தம்பத்தின் அருகே எழுந்தருளும்போது ஸ்ரீ சடாரியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு வந்து பரியட்டம் முதலிய மரியாதைகள் ஆனவுடன் உள்ளே எழுந்தருளி ஸ்ரீ ஆண்டாளுக்கும் ரங்கமன்னாருக்கும் விலையுயர்ந்த சேலையும் வேஷ்டியும் ஸமர்ப்பித்து மங்களாஶாஸனம் செய்தருளியாயிற்று. ஸகல மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு ஸ்ரீ கருடாழ்வான் பெருமாளுடன் ஸமாஸனத்தில் எழுந்தருளியிருப்பதற்கு காரணத்தை ஸ்ரீ அழகியசிங்கர் அர்ச்சகர்களை கேட்டதற்கு அவர்கள் ஆகம ரீதியில் ஸமாதானம் சொல்லக் கேட்டு உகந்தருளியாயிற்று. பிறகு உள்ப்ராகாரத்தில் சித்ர ரூபமாக மிகவும் அழகாக எழுதியுள்ள தஶாவதாரத்தையும் 108 திவ்ய தேசத்தெம்பெருமான்களையும், அபிநவ தசாவதாரமான ஆழ்வார்களையும், விமானத்தில் திருப்பாவை 30 பாசுரார்த்தமும் சித்ர ரூபமாக இருப்பதையும் ஸேவித்துக்கொண்டு, அங்கிருந்து பல்லக்கில் ஊர்வலமாக வடபத்ரசாயி பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி ரங்கமன்னார் ஸந்நிதியிலும் மங்களாஶாஸனம் செய்து ஸகலமரியாதைகளும் பெற்றுக்கொண்டு, பெரியாழ்வார் ஸந்நிதிக்கு எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்து ஸகல பிருதுகளுடன் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு எழுந்தருளியாயிற்று. அன்று மாலை 5 மணிக்கு தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்தாயிற்று. அவ்வூர் வாஸிகள் யதோசிதம் ஆராதித்தார்கள். அன்றிரவு கண்ணனுக்கு டோலோத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. 13-6-54 மாலை 5 மணிக்கு அவ்வூர் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கு எழுந்தருளி சில ரிப்பேர்களை பார்வையிட்டு அதற்குச் செய்யவேண்டிய கார்யங்களை நியமித்து விட்டு அப்படியே ஸ்ரீ ஆண்டாள் அவதரித்த தோட்டத்திற்கு எழுந்தருளி கடாக்ஷித்து உகந்தருளியாயிற்று. அன்றிரவு ஸஞ்சாரம் புறப்படுவதற்குமுன் ஸுமார் 9 மணிக்கு ஸ்ரீ ஆண்டாள் ஸந்நிதிக்கு ஸகல பிருதுகளுடன் எழுந்தருளி மங்களாஶாஸனம் செய்துகொண்டு அங்கிருந்து 12 மைல் தூரமுள்ள வத்திராயிருப்புக்குஎழுந்தருளியாயிற்று. அவ்

வூர் வாஸிகள் பூர்ண கும்பத்துடன் ஸ்ரீ அழ
கியசிங்கரை வரவேற்று அக்ரஹாரத்தில்எழுந்
தருளப்பண்ணினர்கள். 14-6-54 ல் பெரிய
திருமஞ்சனமும் 15-6-54 ல் டோலோத்ஸவ
மும் செய்து வைத்து மூன்று நாள் விசேஷ
மாக பக்தி ச்ரத்தையுடன் ஆராதித்தார்கள்.
16-6-54 இரவு 9 மணிக்கு ஸஞ்சாரம் எழுந்
தருளும்போது அவ்வூரிலுள்ள எல்லா வீதி
களிலும் சத்ர சாமர வாத்யங்களுடன் ஊர்
வலமாக எழுந்தருளி அங்கிருந்து 9 மைலில்
உள்ள விழுப்பனூருக்கு எழுந்தருளியாயிற்று.
அவ்வூர் வாஸிகள் யதோசிதம் ஆராதித்தார்
கள். 17-6-54 பகல் 2 மணிக்குப் புறப்பட்டு
9 மைலில் உள்ள நதிக்குடிக்கு எழுந்தருளி
யாயிற்று. அவ்வூரில் இரண்டுதினங்கள் எழுந்
தருளியிருந்தார். அவ்வூர் ஸ்ரீக்ருஷ்ண அய்யங்
கார் விசேஷமாக ஆராதித்தார். திருமஞ்ச
னமும் டோலோத்ஸவமும் செய்து வைத்
தார். அங்கிருந்து 19-6-54 பகல் 3 மணிக்கு
புறப்பட்டு 12 மைலில் உள்ள திருத்தங்கா
லுக்கு எழுந்தருளியாயிற்று. 20-6-54 காலை
10 மணிக்கு அபிகமன ஆராதனம் நடந்ததும்
அவ்வூர் கோயில் கார்யஸ்தர்கள் ஸ்ரீ அழகிய
சிங்கரை தண்டன் ஸமர்ப்பித்து மங்களா
சாஸனத்திற்கு எழுந்தருளவேணும் என்று
ப்ரார்த்தித்ததின் பேரில் ஸகலபிருதுகளுடன்
எழுந்தருளியாயிற்று. விசேஷமாக ஸ்ரீதேவி
பூதேவி ஜாம்பவதி முதலிய தேவிமார்களுடன்
பெருமாள் ஸேவை ஸாதிக்கிறார். மங்களாசா
ஸனமானதும் அவ்வூர்வாஸிகளின்ப்ரார்த்தனை
யின் பேரில் மாடவீதிகள் வழியாக ஊர் வல
மாக எழுந்தருளியாயிற்று. கற்பூரஹாரத்தி
முதலியது எடுத்து மிகவும் ஸந்தோஷப் பட்
டார்கள். 20-6-54 இரவு அங்கிருந்து புறப்ப
ட்டு 11 மைலில் உள்ள விருது நகருக்கு எழுந்
தருளியாயிற்று. அவ்வூர் ஸ்ரீ பி. டி. திரு
மலை அய்யங்கார் தன்னுடைய க்ருஹத்தில்
எழுந்தருளப்பண்ணி ஆராதித்தார். 21-6-54
இரவு அங்கிருந்து புறப்பட்டு 10 மைலிலுள்ள
வில்லூருக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர்
வாஸிகள் மூன்று தினங்கள் விசேஷமாக ஆரா
தித்து டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்
கள். அவ்வூர் வாஸிகளின் ப்ரார்த்தனையின்
பேரில் அவ்வூர் கோயிலில் ஸ்ரீமதாதிவண்
சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் மூலவ உத்
ஸவ விக்ரஹங்களை முதல் நாள் பாராயணங்
களுடன் ப்ரதிஷ்டைக்கு உபக்ரமிக்கப்பட்டு
23-6-54 ஸ்ரீமதழகியசிங்கர் கஸ்தூரி பட்டா
சாரியரைக்கொண்டு ப்ரதிஷ்டை பண்ணிவைத்
தாயிற்று. அன்று மாலை அவ்வூர் பெருமா
ளுக்கும் ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹா
தேசிகனுக்கும் வீதி உத்ஸவம் பண்ணிவைத்
தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் சத்ர சாமர
சுருட்டி முதலியபிருதுகளையும் அனுப்பி பாரா
யண கோஷ்டியை அலங்கரித்துக்கொண்டு
எழுந்தருளியாயிற்று. பாக்யம் பண்ணவர்
களே அதைக் கண்டு ஆனந்தித்தார்கள். அங்
கிருந்து 24-6-54 இரவு புறப்பட்டு 9 மைலில்
உள்ள தரளிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்
வூர்வாஸிகளும் யதாசக்தி ஆராதித்தார்கள்.
அங்கிருந்து 25-6-54 இரவு புறப்பட்டு 8 மைல்
தூரமுள்ள மதுரைக்கு ஸமீபமான திரு
நகருக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூருக்கு
மதுரை வாஸிகளான ஆஸ்திகர்களும், வைதி
கர்களும் வந்து ஸ்ரீ அழகியசிங்கரை தண்
டன் ஸமர்ப்பித்து மதுரைக்கு எழுந்தருளவே
ணுமென்று மிகவும் பக்திச்ரத்தையுடன் ப்ரார்
த்தித்தார்கள். 26-7–54 இரவு 9 மணிக்கு
திருநகரை விட்டுப்புறப்பட்டு மதுரைக்கு எழு
ந்தருளியாயிற்று. அவ்விடத்தில் ஸ்கூல் அரு
காமையில் எழுந்தருளும் பொழுது அவ்வூர்
வாஸிகள் எதிர்கொண்டு வரவேற்று ஸ்ரீமதழ
கியசிங்கரை தந்தப்பல்லக்கில் எழுந்தருளப்
பண்ணி ஸகல பிருதுகளுடன் சில முக்ய வீதி
கள் வழியாக அவ்வூர் ரயில்வே
ஸ்டேஷனுக்கு அருகாமையிலுள்ள மார்வாடி
சத்திரத்திற்கு எழுந்தருளப்பண்ணினர்கள்.
அவ்வூர் வாஸிகள் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி
வெகு ச்ரத்தையுடனும், உத்ஸாஹத்துடனும்
பெருமாளை விசேஷமாக ஆராதித்து திரு
மஞ்சனமும், டோலோத்ஸவமும் பண்ணி
வைத்தார்கள். 29-6-54 இரவு டோலோத்
ஸவம் நடக்கும் பொழுது அவ்வூர் வாஸிகளின்
ப்ரார்த்தனைக் கிணங்கி 'நமது ஆசாரமும் கட
மையும்' என்னும் விஷயத்தைப் பற்றி மிகவும்
விஸ்தாரமாக ஸ்ரீ அழகியசிங்கர் உபந்யஸித்
தாயிற்று. அதைக் கேட்டு தன் ஸ்வரூபத்தை
உணர்ந்து மிகவும் ஸந்தோஷித்தார்கள்.
அன்று இரவே புதுத்தெருவிலுள்ள வக்கீல்
ஸ்ரீநிவாஸாசாரியர் க்ருஹத்திற்கு தந்தப்பல்
லக்கில் ஸகல பிருதுகளுடன் எழுந்தருளியா
யிற்று. அவர் ஒரு நாள் விசேஷமாக ஆரா
தித்தார். 30-6-54 இரவு அங்கிருந்து புறப்
பட்டு மறுபடியும் மார்வாடி சத்திரத்திற்கே
எழுந்தருளியாயிற்று. மதுரையிலேயே ப்ர
பல தனவந்தரான ஸ்ரீ. டி. வி. ஸுந்தரமய்
யங்கார் பேரன் ஸ்ரீ. ரத்னமென்பவர் நாஸ்

திகம் தலை தூக்கியிருக்கிற இவ்வூரில் ஸ்ரீ அழகியசிங்கருக்கு வீதி உத்ஸவம் விசேஷமாகப் பண்ணிவைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் 2-7-54 இரவு 10 மணிக்கு ஸ்ரீ அழகியசிங்கரை தந்தப்பல்லக்கில் எழுந்தருளப் பண்ணி 6 யானைகள், பாண்டுவாத்யம், 100 லைட், நல்ல வாத்யங்கள், குடைகள் முதலிய ஏற்பாடுகளுடன் மார்வாடி சத்திரத்தை விட்டு மதுரையில் உள்ள எல்லா பெரிய வீதிகளிலும் ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணினர். அவ்வூர் வாஸிகள் இந்த மாதிரி உத்ஸவத்தை இதுவரைக் கண்டதுமில்லை கேட்டதுமில்லை என்று ஸந்தோஷபரிதரானார்கள். ஸுமார் 2 மணிக்கு மறுபடியும்சத்திரத்திற்கு எழுந்தருளியாயிற்று. மறுதினம் மாலை ஆராதனமானதும் அவ்வூர் வாஸிகளின் மனத்தில் நன்ருக படும்படி 'தர்மம்' என்ற விஷயத்தை உபந்யஸித்தாயிற்று. அவ்வூரில் அநேகர்களுக்குஸமாஶ்ரயணமும் பரஸமர்ப்பணமும் நடந்தது. அவ்வூரில் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளியிருந்த 8 தினமும் பெரியவுத்ஸவமாகவே தோற்றமளித்தது. துவரிமான் வாஸிகள் எங்கள் ஊருக்கு எழுந்தருளவேணும்; எங்களூரிலேயே இவ்வருஷ ஸங்கல்ப மஹோத்ஸவத்தை நடத்தவேணும் என்று ப்ரார்த்தித்ததின் பேரில் 4-7-54 இரவு 10 மணிக்கு மதுரையை விட்டுப் புறப்பட்டு 5 மைலிலுள்ள துவரிமானுக்கு எழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கரை பூர்ணகும்பத்துடன் வரவேற்று 3 நாள் பெருமாளை விசேஷமாகஆராதித்து திருமஞ்சனமும்டோலோத்ஸவமும் பண்ணிவைத்தார்கள். இவ்வூரில் 40—வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் பிம்ப ப்ரதிஷ்டோத்ஸவம் மூன்று நாள் முன்னதாக உபக்ரமிக்கப்பட்டு வெகு விமர்சையாக இவ்வூர் வாஸிகளால் நடத்தப்பட்டது. ப்ரதிஷ்டோத்ஸவ முடிவு தினத்தன்று (11-7-54) 40—வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரை நம் ஸந்நிதிக்கு எழுந்தருளப்பண்ணி மாலை மரியாதைகள் முதலியவைகளை ஸ்ரீ அழகியசிங்கர்நடத்திவைத்தாயிற்று. ஆராதனம் முடிந்ததும் ஸ்ரீ அழகியசிங்கருடன் ப்ருந்தாவனத்திற்கு எழுந்தருளி மங்களாஶாஸனம் பண்ணிவிட்டு எழுந்தருளியாயிற்று. ஸாயங்காலம் வீதி உத்ஸவம் வெகு விமர்சையாக நடந்தது. ஸ்ரீ அழகியசிங்கரும் கோஷ்டிக்கு எழுந்தருளியாயிற்று.

15—7—54 ல் சாதுர்மாஸ்யஸங்கல்பமஹோத்ஸவதினத்தன்று ப்ரதிவர்ஷம்போல் காலை அபிகமன ஆராதனத்தை முடித்துக் கொண்டு ஸ்ரீ அழகியசிங்கர் ம்ருத்ஸங்க்ரஹணம்பண்ணியாயிற்று. மதுரையிலிருந்தும் இன்னும் வெளியூர்களிலிருந்தும் அநேகஆஸ்திகர்கள்வந்து ஸேவித்தார்கள். இந்தவர்ஷம் மைஸூர் ராஜா அனுப்பிய யானையும் வந்து சேர்ந்தபடியால் ஊர்வலம் வெகு விமர்சையாக நடந்தது. வைகையில் திருமுடிவிளக்கத்தை முடித்துக்கொண்டு ஸகல பிருதுகளுடன் ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸங்கல்பித்துக்கொண்டாயிற்று. இவ்வர்ஷமும் திருவள்ளூர் முதலிய திவ்யதேசங்களிலிருந்து மரியாதைகள் கொண்டுவந்து ஸ்ரீ அழகியசிங்கருக்குஸமர்ப்பித்து ஆனந்தபரிதர்களானார்கள். அன்றையதினம் அவ்வூர் வாஸிகள் விசேஷமாக ததீயாராதனை பண்ணிவைத்தார்கள். விஜய ௵ சித்திரை ௴ 7௳ ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்திரத்தில் ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீ பாஷ்ய காலக்ஷேபம் (22—7—54) ஜய ௵ ஆடி ௴ 7௳ சாற்றுமுறை பண்ணப்பட்டது. ஸ்ரீ அழகியசிங்கருக்கு காலக்ஷேப வித்யார்த்திகளால் யதாசக்தி ஸம்பாவனைபண்ணப்பட்டது. 24. 7. 54 ஸ்ரீ பாஷ்யகாரர் அருளிச் செய்த வேதார்த்த ஸங்க்ரஹம் காலக்ஷேபம் ஆரம்பிக்கப்பட்டது. மதுரை வாஸிகள் ப்ரதிதினமும் இங்கு வந்து ஸ்ரீ அழகியசிங்கரை தண்டன் ஸமர்ப்பித்து விட்டுப் போகிறார்கள். ஸ்ரீ அழகியசிங்கர் எல்லோரையும் பரிபூர்ண க்ருபையுடன் அநுக்ரஹித்துக்கொண்டு துவரிமானில் எழுந்தருளியாயிருக்கிறது.

(தொடரும்)

प्रकृतः क्रियया धिया च योगः परमैकान्त्यपरिष्कृतस्य पुंसः ।
निधिदर्शनवन्निरूढहर्षं प्रणिधत्ते विशदं परप्रकाशम् ॥

ஸ்ரீ:



திருமாலிருஞ்சோலை

ஸ்ரிய:பதியான எம்பெருமான், அர்ச்சா ரூபத்தில், எல்லையில்லாத கருணையுடன், அநேக திவ்ய தேசங்களில், திருக்கோயில் கொண்டு, அவனடிபோற்று மடியார்க்கு ஆனந்த மளிக்கிறான். இருப்பினும் ஒரு திவ்ய தேசத்தைவிட ஒரு திவ்ய தேசத்தில் உத்ஸவாதிகள் விமர்சையாக நடப்பதும் எம்பெருமான் ஸேவை அத்யற்புதமாக இருப்பதும் சிலர் கண்டதுண்டு. பலர் கேட்டதுண்டு. இதன் காரணம், 'குழந்தையுந்தெய்வமும் கொண்டாடுமிடத்தில்' என்னும் பழமொழிக்கொப்ப, ஆங்காங்குள்ளபக்த கோடிகளின் பக்தி ப்ரவாஹத்தைப் பொருத்து அந்தந்த திவ்ய தேசத்தெம்பெருமான்கள் ஸேவை ஸாதிக்கின்றனர் என்று விஷயமறிந்தவர்கள் ஸாதிக்கக் கேட்டிருக்கிறேன். இப்படி அதி விமர்சையாக நடக்கும் உத்ஸவமொன்றை அடியேன் கண்டு களிக்கும் பாக்கியமடைந்தது, ஸ்ரீமதாசார்ய கடாக்ஷத்தினாலேதான். இதனாலேற்பட்ட உணர்ச்சிப் பெருக்கினால், நம்மைப் போன்ற இதரரும் இந்த ஆநந்தத்தை யடையும்படி நாம் என்ன செய்யலாம் என்று யோசிக்கையில், இச் சிறு கட்டுரையின் மூலம் அவர்களுள்ளத்தில் ஒரு தாகத்தை ஏற்படுத்த முடியுமா என்ற ஒரு முயற்சி. இது வெற்றி பெற ஸ்ரீந்ருஸிம்ஹனின் ப்ரியைதான் க்ருபை செய்ய வேண்டுமென்று ஶரணமடைகிறேன்.

திருமாலிருஞ்சோலை என்ற திவ்ய தேசம் பண்டைய பாண்டிய நாட்டின் தலை நகராகிய மதுரையிலிருந்து 12 மைல் தூரத்திலுள்ளது பெயருக்கேற்ப சோலை நடுவிலமைந்தது. அழகர் என்று எம்பெருமானுக்கும் ஸௌந்தரவல்லி என்று பிராட்டிக்குந் திருநாமம். கிழக்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம். மலயத்வஜ பாண்டியனுக்கும் தர்ம தேவதைக்கும் ப்ரத்யக்ஷம். பெரியாழ்வார், ஆண்டாள், திருமங்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் நம்மாழ்வார் இவர்கள் 128 பாசுரங்களால் இதன் பெருமையைப் பாடியுள்ளனர்.

இவையனைத்துள், ஸ்ரீ ஆண்டாள் பாடிய (நாலாயிரப் பிரபந்தம்—பாசு 592)

'நாறு நறும்பொழில்மாலிருஞ்சோலை நம்பிக்கு
நான்

நூறுதடாவில் வெண்ணெய் வாய் நேர்ந்து பரா
விவைத்தேன்
நூறுதடா நிறைந்த அக்காரவடிசல் சொன்
னேன்
ஏறு திருவுடையான் இன்று வந்திவை கொள்
ளுங்கொலோ’

என்ற பாசுரம் பலரால் பலவிதங்களில் அநுபவிக்கப்படுகிறது.

கோயில், திருமலை, பெருமாள்கோயில் முதலிய திவ்ய தேசங்களுக்கு யாத்ரீகர்கள் வருஷம் முழுவதும் செல்வது போல், இந்த ‘அழகர் கோயில்’ என்று ஸாதாரணமாக வழங்கப்படும் திருமாலிருஞ்சோலைக்கும் பிரதி தினமும் யாத்ரீகர்கள் வந்து எம்பெருமானை ஸேவித்து அவனனுக்ரஹத்திற்குப் பாத்திராகிறார்கள். அப்படிச் செய்யாத அபாக்யர்களுக்கு வருஷத்திலொருதரம், தன் கோயிலில்நின்றும் புறப்பட்டு 12 மைல் தூரம் ஸஞ்சாரம் செய்து மதுரையில் ஸ்ரீ மீனாக்ஷியம்மனுக்கு நடக்கும் திருக்கல்யாணத்திற்கு வருவது என்னும் வ்யாஜத்தை வைத்துக்கொண்டு, இதன் முகாந்தரம் அநேகம் ஊர்களிலிருக்கும் அனந்த கோடியடியார்களுள்ளத்தில் புகுந்து தன்னை வந்து ஸேவிக்கும்படி தூண்டுகிறான். இவன் கருணைதான் என்னே.

இந்த உத்ஸவத்திற்காக ரயில்வே கம்பெனியார், மதுரை நகர ஸபையார், போலீஸார், ஸிட்டி பஸ்கம்பெனியார், யாத்ரீகர்களுக்குத் தம்மாலியன்றவரை யுதவி புரிந்து, அதன் மூலம் அழகரின் அநுக்ரஹத்திற்குப் பாத்திராகிறார்கள். அழகர் கோயிலிலிருந்து புறப்பட்டு வரும் வழியில் அநேக மண்டபங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மண்டகப்படிக்காரர்களும், எம்பெருமானை வரவேற்று இளைப்பாறச் செய்து, உபசரித்துப் பின்பு அடுத்த மண்டபத்திற்கனுப்புகின்றனர்.

SRI NRSIMHA PRIYA

(MONTHLY
OF
SRI AHOBILA MUTH)

Tamil & Hindi

For Hindi Edition; Apply to:—

SRI RAGHAVACHARYA,
SRI ACHARYAPEETH,
Bareilly.
(U. P.)

Memorandum of particulars

Name of Book Kesari

Language Malayalam

Name of Editor K. P. Gopalakrishnan Nair

Subject God, Religion & Character

Place Kozhikode

Name of Printer S. N. Nair

Date of issue ~~27-6-54~~ (11-7-54)

Size. 1/4 Crown

No of Pages 16

Whether Printed Yes

Price Sold. One anna

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 JUL 1954
MADRAS

We declare that the above entries are correct and true to our knowledge

Editor. [signature]

Printer. [signature]

362 3rd [illegible] 1954

P.

No. 362

D/21.7.54.

G.N.

The m. of p. re: to the periodical "Reader" is not in the prescribed form. A revised m. of p. may therefore be called for. Routine draft is put up for approval

[signature] -.7.54.

ஸ்ரீ:

பஞ்சாங்கஸங்க்ரஹம்

ஜய ௵ ஆவணி-புரட்டாசி ௴ 1954 ௵ ஆகஸ்டு-ஸெப்டம்பர் ௴

[தக்ஷிணாயநம்; வர்ஷ ருது; ஸிம்ஹ-கன்யா ௴]

17-8-54	ஆவணி ௴ 1௳	செவ்வாய்க்கிழமை	விஷ்ணுபதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; சூன்யதிதி.]
21-8-54	5௳	சனிக்கிழமை	ஜன்மாஷ்டமி; முனித்ரய வைகாநஸ ஸ்ரீஜயந்தீ.
22-8-54	6௳	ஞாயிற்றுக்கிழமை	பாஞ்சராத்ர ஸ்ரீ ஜயந்தீ.
24-8-54	8௳	செவ்வாய்க்கிழமை	ஸர்வ ஏகாதசி.
27-8-54	11௳	வெள்ளிக்கிழமை	போதாயந அமாவாஸ்யை.
28-8-54	12௳	சனிக்கிழமை	● அமாவாஸ்யை.
31-8-54	15௳	செவ்வாய்க்கிழமை	ஸாமோபாகர்மம்.
7-9-54	22௳	செவ்வாய்க்கிழமை	மூலம்; 28-வது பட்டம் ஸ்ரீரங்கநாத சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்திரம்.
9-9-54	24௳	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம். (பரிவர்த்தந ஏகாதசி.)
10-9-54	25௳	வெள்ளிக்கிழமை	முனித்ரய ச்ரவண த்வாதசி.
12-9-54	27௳	ஞாயிற்றுக்கிழமை	○ பௌர்ணமீ.
15-9-54	30௳	புதன்கிழமை	ஸிம்ஹ க்ருஷ்ண த்ருதீயை திதி.
16-9-54	31௳	வியாழக்கிழமை	சதுர்த்தி திதி. மஹாபரணி கந்யாரவி 55-41.
17-9-54	புரட்டாசி ௴ 1௳	வெள்ளிக்கிழமை	கந்யாக்ருஷ்ண ஷஷ்டி திதி. ஷடசீதி. ஸங்க்ரமண தர்ப்பணம்.
18-9-54	2௳	சனிக்கிழமை	ஸப்தமி திதி.
19-9-54	3௳	ஞாயிற்றுக்கிழமை	மத்யாஷ்டமி.
23-9-54	7௳	வியாழக்கிழமை	ஏகாதசி வ்ரதம். ஸந்யஸ்த மஹாளயம்.
26-9-54	10௳	ஞாயிற்றுக்கிழமை	● மஹாளய அமாவாஸ்யை.
28-9-54	12௳	செவ்வாய்க்கிழமை	நவராத்ரி ஆரம்பம்.
30-9-54	14௳	வியாழக்கிழமை	சதுர்த்தி திதி.

Regd. No. M. 4437.

ஸ்ரீ:

ஸ்ரீ ஸாரபோதிநீ

முதல் பாகம்

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகனுல் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரமென்கிற ஓர் அத்புத க்ரந்தரத்நத்தின் ஒளியாக விளங்கும் "ஸ்ரீஸாரபோதிநீ" என்கிற வ்யாக்யானம் ஸ்ரீ அஹோபிலமடத்தில்42-வதுபட்டத்தில்மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹதிவ்யபாதுகாஸேவக ஸ்ரீ வண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனு லருளிச்செய்யப்பட்டது என்பது ஸர்வலோகவிதிதம். வஸி. வ[illegible]மான இக் க்ரந்தம் விஜய வருஷம் தை மாதம் உத்திராடத்தன்று வெளியாகியிருக்கிறது. உயர்ந்த க்ளேஸ் பேபரில் அச்சிடப்பட்டது. 584 பக்கங்களுடன் கூடியது. இதன் விலை:—

1. (Full) புல்காலிகோ பயிண்டு புத்தகம்— ரூ 6-8-0
2. (Half) ஆப்காலிகோபயிண்டு புத்தகம்— ரூ 6-0-0
3. ராப்பர் பயிண்டு புத்தகம்— ரூ 5-8-0

அபேக்ஷிக்குமாஸ்திகர்களனைவரும் கீழ்க்கண்ட விலாஸத்திற்கு (பயிண்டின் விவாபூர்வமாக) எழுதி பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமாலோல முத்ராலயம்,
திருவள்ளூர்,
செங்கல்பட்டு ஜில்லா.

குறிப்பு:— ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா சந்தாதாரர்களுக்கு 8 அணு தள்ளி கொடுக்கப்படும். சந்தாதாரர்கள் தங்கள் சந்தா நெம்பரை குறிப்பிட்டே அனுப்ப வேண்டும்.

புத்தகம்வேண்டியவர்கள் அதன் க்ரயத்தில் பாதியை முன்பணமாக அனுப்பி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளவும். (பாக்கிங் & தபால் செலவுகள் தனி.)

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam, Sri Ahobilamutt at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T. Sri Ahobila-Mutt Sanskrit College, Madurantakam.